
# யாழ். புதிய மேயர்: துரைராஜா ஏகமனதாகத் தெரிவு

Regiestred as a News Papar in Ceylon விலை சதம் 15 ★ ★

எங்கும் கிடைப்பது
பி.வி.எம்.ஒரென்ஜ் பீடிகளே!




ஈழநாடு


THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 6
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மாசி 5 ஜுல்ஹஜ் 9 திங்கட்கிழமை [16-2-70]

எல்லோரும் விரும்புவது
பி.வி.எம்.ஒரென்ஜ் பீடிகளே!




(நமது அலுவலக நிருபர் கா. யோகநாதன்)

யாழ்ப்பாணம், திங்கள்


யாழ்ப்பாண மாநகரசபையின் புதிய மேயராக தமிழ்க் காங்கிரஸை சேர்ந்த திரு. ரி. எஸ். துரைராஜா நேற்று மாலை ஒருமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். இவரின் பெயரை தமிழரசுக் கட்சியை சேர்ந்த திரு. என். அந்தோனிப்பிள்ளை பிரேரிக்க முன்னாள் மேயர் திரு. எஸ். நாகராசா அனுவதித்தார்.

மாநகர சபை ஆணையாளர் திரு. ஏ.டி சுந்தரம் தலைமையில் மேயர் தெரிவுக்கான கூட்டம் நேற்று பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமானது.

கலரியில் அனுமதிச்சீட்டு உள்ளவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தனர். மாநகரசபை வளவிற்குள்ளும் வெளியிலும் ஏராளமானோர் திரண்டிருந்தனர். பொலிஸ் கோஷ்டி யொன்று கடமையாற்றியது.

மேயர் தெரிவை யொட்டி கொழும்பிலிருந்து வந்த இருவரும், மேயர் தெரிவைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

புதிய மேயர் வெளியில் வந்ததும், அவரது ஆதரவாளர்கள், மாலை சூட்டி ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள்.



# வல்வை இராணுவத்தினர் மீது வழக்குத் தொடர வாய்ப்பில்லை

## பொலிசாருடன்தான் இனி ராணுவம் ரோந்துக் காவல்

யாழ்ப்பாணம், திங்கள்

வல்வெட்டித்துறையில் சென்றவாரம் நடந்த இராணுவத் தாக்குதல் சம்பந்தமாக இராணுவச் சிப்பாய் எவர்மீதும் வழக்குத் தொடரக்கூடிய வாய்ப்பில்லையென்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. தாக்குதல் நடத்தியவர்கள் என அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டப்பட்டவர்கள் தவறானவர்களென்றும் இதனால் இராணுவ சிப்பாய் எவர்மீதும் வழக்குத் தொடரக்கூடிய வாய்ப்பு பொலிசாருக்கு இல்லையென்றும் வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு ஆர். சுந்தரலிங்கம் பொலிஸ் அதிபர் திரு அலரிக் அபயகுணவர்த்தனவுக்குச் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது. இந்த அறிக்கை நேற்று பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக்காரியதரிசியிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் பதவி

## நேர்முகப் பரீட்சைக்கு தமிழ்பண்டிதர்கள் அழைப்பு

பருத்தித்துறை, ஞாயிறு

2ந் தர அதிபர் பதவிக்கு விண்ணப்பித்த சகல பண்டிதர்களைக் கல்விப்பகுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைத்துள்ளது.

ஏற்கனவே நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் தோற்றுவதற்குத் தமிழ்ப் பண்டிதர்கள் பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்குச் சமத்துவமானவர்கள் அல்ல என்ற காரணம் கூறிக் கல்விப்பகுதி அனுமதி மறுத்திருந்தது. இப்பொழுது அந்தத் திட்டததை மாற்றி இவர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளதாம்.

## 'பின்பக்கமாக வந்த எதிரி 3 தடவை குத்தினர்'

யாழ்ப்பாணம், திங்கள்

'மாநகரசபைத்தேர்தலில் துரைராஜாவிற்காக எதிரி பாடுபட்டார். துரைராசாவுடன் குமாரவேலு என்பரின் அனுசரணையுடன் ஆஜரானர் எதிரிக்காக அரசாங்கத்தால் புறக்டர் எஸ். குலநாயகம் நியமிக்கப்பட்டிருந்தார்.

## மகாவலி நிர்மாணவேலை பிரதமர் ஆரம்பித்துவைப்பார்

கோட்டை, ஞாயிறு

மகாவலிகங்கை திசை திருப்பும் திட்டத்தின் நிர்மாணவேலைகளை இம்மாதம் 28-ந் திகதி பிரதமர் திரு டட்லிசேனநாயகா ஆரம்பித்துவைப்பார்

கண்டிமாவட்டத்திலுள்ள பொல்கொல்லையில் இதன் பூர்வாங்க வேலைகள் ஆரம்பமாவதற்கான இயந்திரத்தை பிரதமர் முடுக்கிவைப்பார்

— —

## அஸ்கிரியதேரோ பூதவுடல்

ராஜமரியாதையுடன்

## மேயரை பிரேரிக்க நால்வர் போட்டி போட்டனர்

யாழ்ப்பாண மேயராக திரு. துரைராஜாவின் பெயரைப் பிரேரிக்க ஒரே நேரத்தில் நான்கு உறுப்பினர்கள் போட்டி போட்டுக்கொண்டு எழுந்துநின்றனர் திரு. என் அந்தோனிப்பிள்ளை, திரு. எஸ். அன்ரனி, திரு. ரி. கே. ராஜரத்தினம். ஜனாப் எம். சி. பசீர் ஆகிய நால்வரும் எழுந்துநின்ற போதிலும் முதலில் திரு. அந்தோனிப்பிள்ளையே திரு. துரைராஜாவின் பெயரைப் பிரேரித்தார்.

முன்னாள் மேயர் திரு. எம். சி பசீரும் அனுவதிக்க போட்டி போட்டுக்கொண்டு எழுந்தபோதிலும் திரு. நாகராஜா முந்திக்கொண்டு அனுவதித்தார். உடனே தம்பு கந்தையா எழுந்து திரு. துரைராஜாவின் பெயரைப் பிரேரிக்கநான்கு பேர் எழுந்ததாகவும் யார் பிரேரித்ததென்று அறிய விரும்புவதாகவும் கூறினர். கூட்டத்திற்குத் தலைமைவகித்த ஆணையாளர் திரு. சுந்தரம் திரு. அந்தோனிப்பிள்ளை பிரேரித்ததாகவும் திரு. எஸ். நாகராஜா அனுவதித்

துரைராஜாவிற்காக எதிரா பாடுபட்டார். துரைராசாவுடன் குமாரவேலு என்பவர் போட்டியிட்டார். குமாரவேலுவுக்காக இறந்தவர் பாடுபட்டார். சம்பவம் நடந்ததினம் இறந்தவர் யாழ்ப்பாண பக்கமாக சென்றார். அப்போது எதிரி 'வா அண்ணே' என்று கூப்பிட்டார். தேர்தல் முடிந்துவிட்டது சமாதானமாக இருப்போம்என்று எதிரி கூறினார். இறந்தவர்சென்று கொண்டிருந்தார். பின்னால் சென்ற எதிரி கத்தியால் பின்பக்கமாக அவரை குத்தினார் 2-ம் தடவைநெஞ்சில் குத்தினார். 3-ம் தடவையும் குத்தினார்.'

நாச்சிமார் கோவிலடி கொலை வழக்கில் சாட்சியமளித்த ஆறுமுகம் இரத்தினசாமி மேற்கண்டவாறு கூறினார். இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் சி. ஜி வீரமந்திரி முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ் வழக்கில் நாச்சிமார் கோவிலடியில் 68-ம் ஆண்டு டிசம்பர் 7-ம் திகதி வி. மதியாபரணம் என்பவரை கொலைசெய்ததாக ஏ. பத்மநாதன் என்பவர்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிசார்பில் அட்வகேட் ஐ. பி. செரிபிம், புறக்டர் ஆர். விஸ்வநாதன் புறக்டர் த. யோகநாதன் ஆகியோ கத்தால் புறக்டர் எஸ். குலநாயகம் நியமிக்கப்பட்டிருந்தார்.

இரத்தினசாமி சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:- நான் பங்கராஜ் கடையில் இருந்தேன். அன்று பின்னேரம் எதிரி கடைப் படியில் இருந்தார். அவர் வேட்டி அணிந்திருந்தார். எதிரிக்கும் இறந்தவருக்குமிடையில் பகையிருந்ததா என்பது பற்றி தெரியாது. இறந்தவர் சேட், சாரம் அணிந்திருந்தார் எதிரியிடம் கத்தி இருந்ததை நான் காணவில்லை.

இறந்தவர் கடையின் முன்னால் கிடந்தார். தம்பியார் வந்து எதிரியிடம் கத்தியைப் பறித்து கூட்டிச் சென்றார். நான் இறந்தவரின் சொந்தக்காரருக்குப் போய்ச் சொன்னேன். அவர்கள் வந்து இறந்தவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றார்கள். நானும் ஆஸ்பத்திரிக்குச் சென்றேன்.

எதிரியின் வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது சாட்சி கூறியதாவது:

மாநகரசபைத் தேர்தலில் கடும் போட்டி நடந்தது. 22-ம் வட்டாரத்தில் 2 பேர் போட்டியிட்டனர். தேர்தல் மிகவும் பரபரப்பாக நடந்தது. சந்திக்கு அப்பால் குமாரவேலுவின் தேர்தல் காரியாலயம் இருந்தது. சிவப்பிரகாசம் ரோட்டில் துரைராஜாவின் காரியாலயம் இருந்தது

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

தரக்காரியதரிசியிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

# பொலிஸ் உதவியுடன் ராணுவம்; 19-ந் திகதி புதிய அணி

வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலுள்ள 'சிங்க ரெஜிமென்ட்' இராணுவ அணி அங்கிருந்து திருப்பி அழைக்கப்படவிருக்கிறது. அதற்குப் பதிலாக இலங்கை காலட்படை (ஸி.எஸ்.ஐ) இராணுவ அணி இம்மாதம் 19-ம்திகதி வல்வெட்டித்துறை இராணுவ முகாமுக்கு வந்துசேரவிருக்கிறது.

இதற்கிடையில் வடபகுதியிலுள்ள இராணுவத்தினர் கடலிலோ கடற்கரையிலோ வேறு எந்த இடங்களிலாலும் பொலிசாருடன்தான் ரோந்துக் காவலில் ஈடுபட வேண்டுமென்று உத்தர விடப்பட்டிருக்கிறது. இராணுவத்தினருக்கு பொது மக்கள் எவராவது இடையூறு விளைவிப்பதானால் அதுபற்றி பொலிசாருக்கு உடனடியாக அறிவிக்க வேண்டுமென்றும் இராணுவத்தினர் பதில்நடவடிக்கை எடுக்கக்கூடாதென்றும் உத்தர விடப்பட்டுள்ளதாம்.

## 'கல்லெறிந்ததும் உண்மை தாக்கியதும் உண்மை'

இராணுவ சிப்பாய்கள் மீது சிலர் கல்லெறிந்து நிலைமையைக் குழப்பியது உண்மை தானென்றும் அதே சமயம் பருத்தித்துறை பிரதிநிதி திரு க. துரைரத்தினம் உட்பட பன்னிரண்டு பேர் இராணுவ சிப்பாய்களின் தாக்குதலினால் காயமடைந்ததும் உண்மை தானென்றும் பொலிஸ் அதிபருக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது. இராணுவத் தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து வல்வெட்டித்துறை இராணுவ முகாமில் பருத்தித்துறை நீதிபதி திரு பி. விக்னராஜா முன்னிலையில் நடைபெற்ற ஆள் அடையாள அணிவகுப்பில் 62பேர் கலந்து கொண்டனர்.

இவர்களில் பன்னிரெண்டு பேரை பருத்தித்துறைப் பிரதிநிதி உட்பட மற்றும் சிலரும் அடையாளம் காட்டினராயினும் அவர்கள் சரியான ஆட்களை அடையாளம் காட்டவில்லையாம் இதனால் இராணுவச் சிப்பாய் எவர் மீதும் வழக்குத் தொடர்வதற்கு பொலிசாருக்கு வாய்ப்பில்லை. ஆனாலும் இச்சம்பவம் பற்றி பொலிசார் பலரின் வாக்குமூலங்களையும் பதிவுசெய்து தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர்.

வல்வெட்டித்துறைப் பகுதியில் இப்போது பொதுவாக அமைதி நிலவுகிறது. நேற்று முன்தினம் ஒரு கடற்றொழிலாளியை இராணுவச் சிப்பாய்ஒருவர்விட்டுக்கலைத்துச் சென்றதாகவும் அவர் தப்பியோடிப் பொலிசில் புகார் செய்ததாகவும் இதை தவிர வேறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லையென்றும்கபாலிசார் தெரிவித்தனர்.

## ராஜமரியாதையுடன் தகனம்

கோட்டை, ஞாயிறு

காலஞ்சென்ற அஸ்கிரிய பீடத்தின் 17-வது மகாநாயகதேரோவான வணக்கத்துக்குரிய புத்தரகித்த மகாநாயகதேரோவின் ஈமச் சடங்குகள் இன்று கண்டி போகம்பரை மைதானத்தில் ராஜாங்க மரியாதையுடன் நடைபெற்றது

இவ்வைபவத்தின் போது கவர்னர்ஜெனரல் வில்லியம் கோபல்லவா கலந்து கொண்டு மகாநாயக்கதேரோவின் சேவைகளை நினைவுகூர்ந்தார். பிரதமர் திரு டட்லி சேனநாயக்கா, திரு பி ஜி கலுகல்லே ஆகியோரும் கலந்து கொண்டனர். அவர் பூதவுடல் தகனம் செய்யப்பட்டபோது 19 குண்டுகள் தீர்ககபபட்டன.

ரித்தார்.

முன்னாள் மேயர் திரு. எஸ். நாகராஜாவும், ஜனுப் எஸ். நாகராஜா அனுவதித்

(4-ம் பக்கம் பார்கக

## கொழும்பில் இரத்தினக்கல் வர்த்தக நிலையம்

### ஊழலை தடுக்க அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, ஞாயிறு

கொழும்பில் இரத்தினக்கல் வர்த்தக நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு வர்த்தக வியாபார அமைச்சர் திரு கியூ பெர்னாண்டோ தீர்மானித்துள்ளார்

இரத்தினக்கற்களைத்தொழிலாளரிடமிருந்து குறைந்த விலைக்கு வியாபாரிகள் பெறுவதைத்தடை செய்யும் இயக்கமும் இந்நிலையத்தில் ஆரம்பிக்கப்படுமெனவும் இரத்தினக்கற்களின் விலைகளை மதிப்பிடுதல், இரத்தினக்கல் வியாபாரிகள் இரத்தினக்கற்கள் பெறும் உல்லாசப் பிரயாணிகளிடம் தடைசெய்யவும் இந்நிலையம் நடவடிக்கை மேற்கொள்ளும்மெனவும் வர்த் அமைச்சைச்சேர்ந்த வட்டாரங்கள்தெரிவித்துள்ளன

இரத்தினக்கல்வியாபாரத்திலுள்ள ஊழல்களை நீக்குவதோடு மட்டுமல்லாமல் இந்நிலையம் இரத்தினக்கல் ஏற்றுமதியிலும் உதவியளிக்கும் இந்நிலைய நடவடிக்கைகளுக்குத் தேவையான ஆலோசனைகள் கூறவும் உதவிசெய்யவும் ஐக்கிய அமெரிக்காவிலிருந்து நிபுணர்கள் இந்நிலையத்திற்கு வரவிருக்கிறார்கள் (சி பி ஏ)

## இராணுவத் தாக்குதலை எதிர்த்து 20-ந் திகதி ஹர்த்தால்

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழ்ப்பகுதிகளில் இம்மாதம் 20ந் திகதி ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படலாமெனத் தெரிகிறது இந்த ஹர்த்தால் தினத்தன்று வர்த்தக, பொதுஸ்தாபனங்களை மூடிக் கதவடைப்புச் செய்யவும், கறுப்புக்கொடிகளைச் சந்திகள், வீடுகளில் தொங்க விடும்படியும் கோரப்படலாம். இதற்கான தீர்மானம் யாழ்ப்பாணத்தில் இம்மாதம் 17ந் திகதி நடைபெறவிருக்கும் அகில இலங்கைத் தமிழரசுக்கட்சியின் செயற்குழுவில் முடிவாக எடுக்கப்படவிருக்கின்றது.

வல்வெட்டித்துறை, மன்னார் ஆகிய இடங்களில் நடைபெற்றுள்ள இராணுவத் தாக்குதல் பற்றிய கண்டனத்தைத் தெரிவிப்பதற்கே இவ்வாறான துக்க தினம் கொண்டாடப்படத் தமிழரசுக் கட்சியினர் ஏற்பாடுகள் செய்துவருவதாகத் தெரிகிறது.

1956ம் ஆண்டில் யு. என். பி. களனி மகாநாட்டில் சிங்களம் மட்டும் மசோதாவை நிறைவேற்ற எடுத்த தீர்மானத்திற்குக் கண்டனம் தெரிவித்து, பெப்ரவரி மாதம் 20ந் திகதியே துக்க தினம் அனுஷ்டித்தது. இதனைப் பின்பற்றியே மீண்டும் தமிழ் மக்களிடையே உணர்ச்சியை ஏற்படுத்த இவ்வகையில் துக்க தினம் இவ்வருடமும் பெப்ரவரி 20ந் திகதி அனுஷ்டிக்கப்படவேண்டுமெனத் தமிழரசுக்கட்சியினர் கருதுகின்றனராம். (மல்லா. நிரு.)

## இ. தி. மு. க. புதிய பொதுசெயலாளர்

கொழும்பு, ஞாயிறு

திரு இரா இளஞ்செழியன் வகித்துவந்த இலங்கைத் திமுக பொதுச் செயலாளர் பதவிக்கு ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியரான திரு பி ஏ விசாகரத்தினம் இன்று தெரிவு செய்யப்பட்டார் இ தி மு க பொதுச் சபைக்கூட்டததில் இப்புதிய தெரிவு நடைபெற்றது

வல்வெட்டித்துறையில் நடைபெற்ற ராணுவத்தினரின் அட்டகாசம் குறித்தும் பொதுச்சபை கண்டனம் தெரிவித்தது

## 'தமிழில் விஞ்ஞானம்'

கொழும்பு, ஞாயிறு

'தமிழில் நல்ல விஞ்ஞான நூல்கள் வெளிவரவேண்டும். ஆங்கிலத்தில் தேர்ச்சியில்லாத சிறார்கள் படித்துப் பயனடையக்கூடிய விதத்தில் இந்நூல்கள் அமைய வேண்டும்'


பேராசிரியர் திரு. அ. சின்னத்தம்பி எழுதிய 'மகப்பேறு' என்ற நூல் அறிமுக பாராட்டுவிழாவில் பேராசிரியர் திரு ஆ வி. மயில்வாகனம் பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்விழாவில் திரு. சு. வித்தியானந்தன், கே. லக்ஸ்மணன், ஏ.எம்.ஏ. அஸிஸ் உட்பட பலர் பேசினர்.

## யாழ். மாவட்டத்தில்

# சிறந்த கிராம சபையாக தெல்லிப்பழை தெரிவு

### தலைவரிடம் பரிசிலை இன்று பிரதமர் டட்லி வழங்குகிறார்



தலைவர்
திரு. ம. சிதம்பரநாதன்

யாழ்ப்பாணம். திங்கள்

யாழ். மாவட்டத்தில் சிறந்த கிராமசபையாக தெல்லிப்பழைகிராமசபைதெரிவு செய்யப்பட்டுள்ளது. உள்ளூராட்சி அமைச்சினால் நடாத்தப்பட்ட உள்ளூராட்சிவாரத்தின் போதுதெல்லிப்பழை கிராம சபையின் நிர்வாகச் சிறப்புபாராட்டைப்பெற்று சிறந்த கிராமசபை என தெரிவு செய்யப்பட்டது.

தெல்லிப்பழைகிராமசபை இதற்கான விருதை இன்று பிரதமமந்திரி திரு டட்லி சேனநாயக்காவிடமிருந்து பெற்றுக் கொள்ளும் கிராமசபைத்தலைவர் திரு. ம சிதம்பரநாதன் கொழும்பு தூர்ஸ்ரன் வீதியில்அமைந்த புதிய றோயல் படமாளிகையில் நடைபெறும் பரிசளிப்பு வைபவத்தில் பிரதமரிடமிருந்து பரிசிலைப் பெற்றுக் கொள்ளுவார்.

1968-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் மேற்படி சபையின் நிர்வாகத்தைக் கையேற்ற தலைவர் திரு. சிதம்பரநாதன் தமது அயராத, கண்ணியமான உழைப்பினால் கிராமத்தைமுன்னேற்றுவதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். கிராமசபை தலைவருடன் ஒத்துழைத்து சேவை செய்த பிரதம செயலாளர் திரு. க சிவபாதத்தினது சேவையையும் அமைச்சு பாராட்டியுள்ளது.

சகல கிராமசபை அங்கத்தவர்களினது ஒத்துழைப்பும் வரியிறுப்பாளர்களின் ஒத்துழைப்பும் இவ்வித பாராட்டை கிராமசபை பெறுவதற்கு உதவியாகயிருந்ததாக தலைவர் கூறுகிறார்.



செயலாளர்
திரு. க. சிவபாதம்

## 'வல்வெட்டித்துறை சம்பவம் திட்டமிட்ட செயல்' — தளபதி

வல்வெட்டித்துறைச் சம்பவங்கள்பற்றி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சேபால அட்டிகல பாதுகாப்புவெளிவிவகார அமைச்சிடம் இன்று தமது கருத்துக்களை தெரிவித்தார். சம்பவம் நடந்த மறுநாள வல்வெட்டித்துறைக்குச்சென்று பார்வையிட்டுத் திருபியம் இராணுவத் தளபதி இராணுவத்தினருக்கு அவப்பெயர் உண்டாக்கி அவர்களை இங்கிருந்து வாபஸ் பெறுவதற்கு கட்டாயப் படுத்தும்பொருட்டு திட்டமிட்டு ஆத்திரமூட்டப்பட்டிருப்பதாக இராணுவ துப்பறியும் பிரிவு தெரிவித்திருப்பதாக தளபதி கூறியுள்ளதாக அறியப்படுகிறது.

## பருத்தித்துறை எம். பி.யை 'எக்ஸ்-றே' பிடித்தனர்

யாழ்ப்பாணம், திங்கள்

பருத்தித்துறை மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும்பருத்தித்துறை எம் பி திரு கு துரைரத்தினம் காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு. அங்கு 'எக்ஸ்றே' பிடிக்கப்பட்டார் 'எக்ஸ்றே' பிடிக்கப்பட்டதும், எம் பி மந்திகை அரசினர் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டு அங்கு தொடர்ந்து சிகிச்சைபெற்று வருகிறார்.

நாளை திரு துரைரத்தினம் சிகிச்சை பெறுவதற்காக யாழ்ப்பாணம் அரசினர்ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

எமது ஸ்தாபனத்தின் வேலைகளில் உதவி செய்வதற்கு ஆட்கள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். எஸ்ரிஎம் இன்டஸ்றி றபர் ஸ்டாம்புகள், வீட்டுப்பெயர்கள் தயாரிப்பவர்கள். பழைய பஸ்நிலையத்துக்கு முன்பாக, 1/3, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம் 1857

கைத்தறி நெசவு வேலைக்கு நன்குபயிற்சிஉள்ள பெண்கள் தேவை. நேரில் வரவும். சுந்தரம்ஸ் வீவிங் இன்டஸ்றீஸ், 18, கச்சேரி லேன், யாழ்ப்பாணம். 1852

சமையல் வேலை செய்யக்கூடிய பையன் உடனே தேவை. கடதாசிப் பூ வேலைகள்செய்யத்தெரிந்தால் மிக விரும்பத்தக்கது. வயது 15க்கு உட்பட்டதாக இருக்கவேண்டும். தாய் அல்லது தகப்பனுடன் நேரில் வரவும். விபரங்கள் நேரில்.

மனேஜர்: K. சந்திரன், செல்லம்ஸ், அம்பசிடர் பூக்கடை, 47, 3-ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். 1854

### நன்றி நவிலல்

காலஞ்சென்ற எனது கணவரான (இளைப்பாறிய கூட்டுறவு ஆணையாளரும், முன்னுள் நெல்லியடி பட்டினசபைத் தலைவருமான) திரு வி எஸ். பொன்னையா அவர்களின் மரணச்சடங்குகளில் நேரில் வந்து கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும் நானும் எனது குடும்பத்தினரும் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். தனித்தனியே தெரிவிக்க இயலாமைக்கு வருந்துகின்றோம்.

திருமதி பொன்னையா, விதானை வளவு, நெல்லியடி, கரவெட்டி. 1855

**MANOHARA**
**JAFFNA**
Daily 4-45, 7 & 9-45 p.m
PrePoya, Poya 4 Shows
Don Murray,
Dornald Houstan
THE VIKING QUEEN
(color) (20th centuary
Fox present)

### விற்பனைக்கு

எம். ஜி. ஆர், சிவாஜி, சாயிபாபா, மற்றும் கத்தோலிக்க சைவசமய தெய்வங்களினதும், அரசியல் தலைவர்களினதும் உருவங்கள் பதித்த மோதிரங்கள்-மெடல்கள் - பென்டன்கள் விற்பனைக்குண்டு விலை ரூபா 1-25. வியாபாரிகளுக்கு விசேஷ கமிஷன் உண்டு. எஸ்ரிஎம் இன்டஸ்றி பழைய பஸ்நிலையத்துக்கு முன்பாக, 1/3, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 1856

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 16—2—70

செய்திகள்: காலை 6-45, 8-00, 8-30.
பகல் 12-00, 12-45, 1-30.
மாலை 4-25, 5-00, 6-00.
இரவு 7-00, 8-00, 9-00, 10-30.
திரைகானம்: காலை 7-45.
பகல் 12-03, 1-00.
இரவு 10-00.
இரவு 7-15 புல்லாங்குழல், 7-45 பேச்சு, 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம்.

குடியேற்றத் திட்டங்களில்

## ரூ. 11,000,000 செலவில் கல்வி வசதி

கோட்டை, ஞாயிறு

குடியேற்றத் திட்டங்களில் வசிப்பவர்களின்பிள்ளைகளுக்கு கொழும்பு மற்றும் பெரிய நகரங்களிலுள்ள கல்வி வசதிகளை அளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இவ்வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக ரூபா 11,000,000 செலவு செய்யவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. 6 பிரதான குடியேற்றத்திட்டங்களில் சகல வசதிகளோடும்கூடிய மகா வித்தியாலயங்கள் நிறுவப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதவியா, கந்தளாய், ராஜன் ஜாஞ, மிஹியங்கனை, கண்டுளா, கிளிநொச்சி ஆகியவை இப்புதிய கல்வித்திட்டத்தின்கீழ் பயன்பெறவுள்ளன.

### வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம்

111, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

மேற்படி சமாசத்திற்கு 25,000 "சி" தரச் சாக்குகள் தேவை. 19-2-70 பகல் 12 மணிக்கு முன்னர் விண்ணப்பப்பத்திரங்களை நிபந்தனைகளுடன் பெற்றுக் கொள்ளவும்.

1958 காரியதரிசி.

## கேள்வி விளம்பரம்

### கிராமசபை வட்டுக்கோட்டை

வட்டார வேலைகளுக்கு கல்லு, மக்கி, மணல் விநியோகித்தல்

1970-ம் ஆண்டு பெப்ரவரி (மாசி மாதம்) 27-ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-30 மணி வரை மேற்படி வேலைக்கு சீல் வைத்த கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் 26-2-70-ம் திகதி நண்பகல் 12-00 மணி வரையும் ரூபா 25/- கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். ஏனைய விபரங்களை எனது கந்தோரில் அறிந்துகொள்ளலாம்.

தலைவர்,
வட்டுக்கோட்டைக் கிராமசபை.

கிராமசபை அலுவலகம்,
வட்டுக்கோட்டை,
12-2-1970. 1959

### வித்தியாதிபதியை சந்தித்துப் பேசினர்

மல்லாகம், ஞாயிறு

குரும்பசிட்டி தமிழ்க் கலவன் பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள தலைமையாசிரியர் திரு. மு க சுப்பிரமணியம் தலைமையில் பிரஸ்தாப பாடசாலையில் ஏழாம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளமையை யடுத்து நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை குறித்து வடமாநில வித்தியாதிபதி திரு எஸ் தணிகாசலத்தை நேரில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர் குழுவின் கோரிக்கை சம்பந்தமாகத் தாம் கவனிப்பதாக வித்தியாதிபதி உறுதியளித்தார்

### டாக்டர் ஜாரிங்கை யுதாண்ட் சந்திப்பார்

லண்டன், பெப். 15

மேற்காஸியாவில் அமைதிக்கு வழிகாண்பதற்காக நியமிக்கப்பட்ட டாக்டர் ஜாரிங்கை ஐ. நா. பொதுச் செயலாளர் யுதாண்ட் விரை

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்

### க. பொ. த. (உயர்தர) GCE(A.L.) கலை, வர்த்தக வகுப்புக்களில் மாணவர்களைச் சேர்த்தல்

க. பொ. த. (உயர்தர) கலை, வர்த்தக வகுப்புகளில் சேர விரும்பும் தகைமையுள்ள மாணவர்கள் 25-2-70-க்கு முன் விண்ணப்பிக்கவும்.

மாணவர்கள் 18 வயதுக் குட்பட்டவர்களாயிருத்தல் வேண்டும்.

1956 அதிபர்.

# இன்றைய பலன்

மாசிமாதம் 5-ம் திகதி [16-2-70]

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்**- வீட்டில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் நடைபெறும். விருந்துபசாரங்களும் உண்டு. சிலருக்கு வாகன இலாபமும் கிடைக்கலாம். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் உண்டு.

**ரிஷபம்**- இன்று எதிலும் நிச்சயமற்ற நிலைதென்படும். மனதில் விரக்தி மனப்பான்மை தலைதூக்கும் உணர்ச்சிவசப்படுவதால் வேண்டாத விளைவுகள் உடுவாகும் மனஅடக்கம் நன்று.

**மிதுனம்**- கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். சிலருக்குப் பதவிஉயர்வு ஏற்படலாம். வெளியிடத்துத் தொடர்புகள் மூலம் செல்வாக்குப் பெருகும். நீண்ட நாள் பிணக்குகள் இன்று நிவர்த்தியாகும்.

**கடகம்**- தாம்பத்திய வாழ்வில் அன்பு தவழும். வாழ்க்கையில் தரமும் உயரும் காதலர்கள் வாழ்வில் கற கண்டான நாள்.

**சிம்மம்**- நிலவின் நிழலாட்டம் நிம்மதியைச் சிதறடிக்கும். உறவினர்கள் மத்தியில் பூசல்கள் தலைதூக்கும். அன்னியர்களின் தொடர்புகள் சிக்கலைத் தோற்றுவிக்கும்; மட்டமான தினம்.

**கன்னி**- வாகனச்சாரதிகளுக்கு இன்று சிறப்பான தினம். வரவிலும் திருப்தி காணப்படுகிறது. தாய்வழி மூலம் சிலருக்கு தனலாபம் கிடைக்கும். அறிஞர்களின் தொடர்புகளுக்கும் இடமேற்படும்.

**துலாம்**- குடும்பத்தில் சிறுபிணி தலைதூக்கும். இதன் மூலம் வைத்தியச்செலவுகளுக்கும் இடமேற்படும். மேலதிகாரிகளின் கண்டிப்புக்கும் இலக்காவீர்கள். கடமையில் அதிக கவனம் செலுத்தவும். இறைநம்பிக்கை நன்று.

**விருச்சிகம்**- நீண்ட பிரயாணம் ஒன்று மேற்கொள்ளப்படலாம். பொருள் கைவிட்டுப்போவதற்கும் இடமுண்டு. வாகனச் சாரதிகள் அதிக கவனம் செலுத்த வேண்டும் அமைதி நன்று.

**தனுசு**- மனதுக்கு மகிழ்ச்சியைத் தரும் சம்பவங்கள் இடம்பெறும். குடும்பவாழ்க்கையில் தென்றல் வீசும் தொழில்துறையிலும் புதிய வாய்ப்புக்கு இடமுண்டு. பெரியோர்களின் ஆதரவும் தவறாது கிடைக்கும்.

**மகரம்**- ஏமாற்றம் தாக்கும் எதிலும் தயக்கநிலை தென்படும். செய்தொழில் மூலம் நஷ்டம் ஏற்படலாம். செலவினங்களைக் கட்டுப்படுத்திக்கொள்ளவும். நண்பர்களால் தொல்லைகள் தோன்றக்கூடும்.

**கும்பம்**- பாக்கியவிருத்தியுடன் பரம்பொருளின் அருளும் கிடைக்கும். தக்கசமயத்தில் உதவுவதற்குத் தந்தை முன்வருவார். பெரிய இடத்துத் தொடர்பு ஒன்று இன்று ஏற்படலாம். சிறப்பான தினம்.

**மீனம்**- பணம் தாராளமாகக் கிடைக்கும். சிலருக்கு அதிஷ்டதேவதையின் அணைப்பும் உண்டு கடமையாற்றும் இடத்தில் மேலதிகாரியின் நம்பிக்கையை பெறுவீர்கள். உற்சாகமான தினம்.

### ஐக்கிய விளையாட்டு கழகத்திற்கு வெற்றி

### 'பிரமானந்த ஸ்ரேயம்'

## கந்தபுராண யுத்தகாண்ட உரை நூல் வெளியீடு

கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை இந்து மன்றத்தினரால் வெளியிடப்படவிருக்கும், மேற்படி நூல் சுன்னாகம் திருமகள் அச்சகத்தில் அச்சேற்றப்பட்டு வருகின்றது எதிர்பாராத காரணங்களினால் இந்நூல் வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்பதை பொருள் உதவிய அன்பர்களுக்கு தெரியத்தருகின்றோம்.

செயலாளர்,
இந்து மன்றம்,
1957 கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை.

உள்ளூராட்சி வாரம்

## ஆரோக்கியமுள்ள குழந்தைகளுக்கு பரிசு

கோப்பாய், ஞாயிறு

உள்ளூராட்சி வாரத்தையொட்டி கோப்பாய் கிராம சபையால் கொண்டாடப்பட்ட சுகாதார தினப்போட்டியில் பின்வருவோர் தேக ஆரோக்கியமுள்ள குழந்தைகளாகத் தெரிவுசெய்யப்பட்டு அக்குழந்தைகளுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

பரிசுபெற்றவர்கள் விபரம்:

கோப்பாய்தெற்குப்பகுதி: என் பாலச்சந்திரன் ஆர். ரேணுகா, எம். லோகேஸ்வரன்.

கோப்பாய்வடக்குப்பகுதி: எஸ். கிருஷ்ணகுமார், ஆர். கோசலா, எஸ். அகிலேஸ்வரன், ஆர். தேவராசா, ஆர்.செல்வராணி, ரி.ரஜனி, கே. ஜெயகுமார், எஸ். இன்பராணி, எஸ் ராமேஸ்வரன்.

மாதாசிசுபரிபாலன நிலையத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு கோப்பாய் மாவட்ட வைத்திய அதிபர் திரு. எஸ். ராஜரத்தினம், சுகாதார அதிபர் திரு. ஏ. மயில்வாகனம் ஆகியோர் மத்தியஸ்தர்களாக கடமையாற்றினர்.

உள்ளூராட்சி

## அமைச்சருக்கு வவனியா எம். பி. புகழ்மாலை

முல்லைத்தீவு, ஞாயிறு

'உள்ளூராட்சிவாரம் எனப்படும் இவ்வாரத்தை இலங்கைச் சரித்திரத்தில் முதல் முதல் ஏற்படுத்தி உள்ளூராட்சி மன்றங்களுக்குப் புத்துயிர் ஊட்டி மக்களுக்கு உள்ளூராட்சி மன்றங்களின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தவர் எமது உள்ளூராட்சி அமைச்சர் இங்கு நான் திறந்து வைக்கும் வார்ப்பு வீடுகளை

## பல்கலைக்கழக விவகாரம்

### ஒருமாகாணப் பிரச்னையல்ல

யாழ்ப்பாணம், திங்கள்

68ம் ஆண்டுமார்ச் மாதம் உயர்கல்விக்காக யாழ்ப்பாணத்திலிருந்து1300 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். திருகோணமலை மட்டக்களப்பிலிருந்து 78 மாணவர் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர் இம்முறை இன்னும் கூடுதலான மாணவர்கள் வடபகுதியிலிருந்து உயர்கல்விக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர் ஆதலால்யாழ்ப்பாணத்தில் தான் பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டும்.

புங்குடுதீவு மேற்கு பயிர்ச்செய்கைக்குழுத் தலைவர் திரு ச, கந்தப்பிள்ளை வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில்மேலும் கூறப்பட்டதாவது: யாழ்ப்பாணத்திலிருந்து 68 ம் ஆண்டு உயர் கல்விக்குஅனுமதிக்கப்பட்ட மாணவர்களில் 256பேர் ஊர்காவற்றுறை தொகுதியை சேர்ந்தவர்கள். பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டால் பின்தங்கிய தீவுப்பகுதி மாணவர்களுக்குப் பேருதவியாகஇருக்கும்.

பல்கலைக்கழக பிரச்னை ஒரு சமூக தேவைப் பிரச்னையன்று மாகாணப்பிரச்னையல்ல. பல்கலைக்கழகத்தை யாழ்ப்பாணத்தில் அமைப்பதுஅவசியமாகும். பொருத்தமானதுமாகும்.

யாழ், தீவுப்பகுதி பயிற்செய்கைகுழுசமாசத்தலைவர் திரு.ஏ.கனகசபை பல்கலைக்கழகவிசாரணை கமிஷன் முன்னிலையில் சாட்சியமளிக்கும் போது இக்கருத்துக்களை தெரிவிப்பார்.

மாணவர்கள்

## சிரமதானமூலம் ஆக்கவேலைகள் செய்தனர்

## அம்மா இல்லாத போது

குடும்பத்திட்ட முறைகளை நீங்களும்கடைப்பிடித்துவிரும்பாத பிள்ளைப்பேற்றைத் தடை செய்யுங்கள். ஒவ்வொரு பிள்ளைப் பேற்றுக்கும் இடையில் ஆகக் குறைந்தது மூன்று வருடகாலமாவது இடைவெளி இருக்க வேண்டும் இப்பொழுது இலங்கை முழுவதிலும் 75,000 தம்பதிகள் குடும்பத் திட்டக் கிளினிக்குகள் மூலம் குடும்பத்திட்ட முறைகளைக் கடைப்பிடித்து வருகின்றனர். உங்கள் இருவருக்கும் குடும்பத்திட்ட ஆலோசனைகளும், முறைகளும் தேவைப்பட்டால் அருகிலுள்ள அரசாங்க ஆஸ்பத்திரிக்கு ஒருமுறை சென்று விசாரியுங்கள் அல்லது இரகசியமான பதிலைப் பெற எமக்கு எழுதுங்கள். ஆரோக்கியமும் அறிவும் உள்ள பிள்ளைகள் குடும்ப உயர்வுக்கு வழி வகுக்கின்றனர்.

குடும்பத்திட்டத் தகவல்,
457, காலி வீதி,
கொள்ளுப்பிட்டி.

## 500 பேருக்கு வேலைவாய்ப்பு

மித்தேனியா, ஞாயிறு

ஹல்மிலகெட்டியா, எம்பிலிபிட்டியா ஆகிய பகுதிகளில் கடதாசித் தொழிற்சாலை ஒன்றை விரைவில் அமைக்க ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபை நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

இவ்வாண்டு பூர்த்தியாவதற்குள் இந்தத் தொழிற்சாலை நிறுவப்பட்டுவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாலை பூர்த்தியாகிச் செயற்பட ஆரம்பித்தால் 500க்கும் மேலானவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

வடபகுதிரயில்சேவை

## சிற்றுண்டிச்சாலை சீர்கேடு

கொழும்பு, ஞாயிறு

வடமாகாண சேவையிலீடுபட்டுவரும் யாழ்தேவி, உத்தரதேவி, தபால் புகையிரத வண்டிகளிலுள்ள சிற்றுண்டிச்சாலை போதிய வசதிகளற்ற நிலையிலிருப்பதாக அநேக பிரயாணிகள் புகார் செய்துள்ளனர். இலங்கையின் ஏனைய பாகங்களுக்குச் செல்லும் மெயில் வண்டிகளில் சகல வசதிகளும்செய்து கொடுக்கப்பட்டிருக்கின்

ராஜா

ரவிச்சந்திரன் - ராஜ்ஸ்ரீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Fox present)

ராஜா (யாழ்ப்பாணம்) (தினசரி 3 காட்சிகள்)

ரவிச்சந்திரன் - ராஜ்ஸ்ரீ நடித்த

பிரிபோயா, போயா 4 காட்சிகள்

# டில்லி மாப்பிள்ளை

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு நடித்த

# அடிமைப் பெண்

கெப்பிட்டல் (கொழும்பு)

பிளாஸா (வெள்ளவத்தை)

## வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 ம ணி.

தமிழ்நாட்டில் மக்கள் மத்தியில் புதிய சாதனையை ஏற்படுத்திய மாபெரும் வண்ணத்திரை ஓவியம்.
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்று ''பேசும்படத்தின்'' மூன்று விருதுகள் பெற்ற வெற்றிச்சித்திரம்
(1) சிறந்த படம் (2) சிறந்த நடிகர் (சிவாஜி) (3) சிறந்த உபநடிகர் (பாலையா)
நாதஸ்வர இசை:
மதுரை சேதுராமன் - பொன்னுச்சாமி சகோதரர்கள்





## சிவாஜிகணேசன் பத்மினி

பாலையா
நாகேஷ்
நம்பியார்
ர.வி.எம். ராஜன்
மனோரமா
மற்றும்பலர் நடித்த



சிவாஜிகணேசன் அளிக்கும்





திக்கு வழிகாணப்பதற்காக நியமிக்கப்பட்ட டாக்டர் ஜாரிங்கை ஐ. நா. பொதுச் செயலாளர் யுதாண்ட் விரைவில் சந்திக்கவிருப்பதாக அறிவித்திருக்கிறார்.

அதேசமயம் மேற்காஸியாவில் யுத்த நிறுத்த அமைதிப்படையின் தலைவர் திரு. ஓட்புல்லை நியுயோர்க்வரும்படி யுதாண்ட் அழைத்திருக்கிறார்.

— —

## நலவுரிமைச் சங்க நிர்வாகிகள்

வேலணை, ஞாயிறு

வேலணை தெற்கு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் நலவுரிமைச் சங்க புதிய நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. நா. ஐயம்பிள்ளை, உபதலைவர்: திரு அ. சின்னத்துரை, செயலாளர்: திரு. ஐ. பாலசுப்பிரமணியம், உபசெயலாளர்: திரு. த. கந்தையா, தனாதிகாரி: திரு. இ. கதிர்காமு.

பஞ்சாயசபை உறுப்பினர்களாக திருவாளர்கள் ஐ. கந்தையா, சி. கந்தையா, வ. இராமலிங்கம், எ. இளையதம்பி, நா. பரமசாமி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.


## வெஸ்லி சினிமா

மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
அசோகன் - சரோஜாதேவி நடித்த

## மணப்பந்தல்

வல்வெட்டித்துறை

## றஞ்சனா தியேட்டர்

தினசரி: 6-30, 9-30
இங்கோங் - தாராசிங் நடித்த

## மகாபாரதம்

4-00 p.m. Only
A MAN CALLED DAGGER

## ஸ்ரீ காலிங்கன்

இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30 மணி
சம்மிகபூர் — கல்பனா நடித்த

## புறபஸர்

[கலர் - ஹிந்தி]

## REGAL JAFFNA

Daily 10-30 4-45, 7 & 9-45
Jim Brown, Diahann Carroll
in
THE SPLIT
(adults only)


## ஐக்கிய விளையாட்டு கழகத்திற்கு வெற்றி

முல்லைத்தீவு, ஞாயிறு

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடந்த இறுதி உதைபந்தாட்டப் போட்டியில் முல்லைத்தீவு ஐக்கிய விளையாட்டுக் கழகமும், முல்லைத்தீவு சந்திரன் சன சமூக நிலையமும் பங்குபற்றி விளையாடின. இவ் ஆட்டம் முல்லைத்தீவு ராணுவமுகாமில் நடைபெற்றது.

இப்போட்டியில் சந்திரன் சன சமூக நிலையக்கோஷ்டியை 3—1 கோல்களால் ஐக்கிய விளையாட்டுக்கழகத்தினர் தோற்கடித்தனர்.

திரு. பொ. தியாகராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

.........

## அப்பலோவுக்கு வெற்றி

வசாவிளான், ஞாயிறு

வசாவிளான் அப்பலோ விளையாட்டுக்கழகத்திற்கும் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே நடைபெற்ற சினேகபூர்வமான கரபந்தாட்டப் போட்டியில் அப்பலோகழகம் வெற்றிபெற்றது.

ஞான வைரவர் கோவில் மைதானத்தில் நடந்த இப்போட்டிக்கு திரு. ஆர். சங்கரப்பிள்ளை மத்தியஸ்தம் வகித்தார்.

... ...

## திருமலையில் சுயாட்சிக் கழகம் போட்டி

திருக்கோணமலை, ஞாயிறு

திருக்கோணமலையிலும், மட்டக்களப்பிலும் தமிழர் சுயாட்சிக் கழகம் வருகிற பொதுத் தேர்தலில் அபேட்சகர்களை நிறுத்தவிருக்கின்றது.

அரசாங்க உத்தியோகத்திலிருந்து ஓய்வுபெறவிருக்கும் ஒருவர் திருக்கோணமலையில் சுயாட்சிக் கழகத்தின் சார்பில் நிறுத்தப்படலாமெனத் தெரிகிறது.

திருக்கோணமலையில் நடைபெற்ற தமிழரசுக்கட்சி அபேட்சகர் தெரிவு முறையினால் அதிருப்தி அடைந்துள்ள தமிழரசுக் கட்சியின் நீண்ட நாளைய முக்கிய உறுப்பினர் பலர் சுயாட்சிக்கழகத்தின் சார்பில் திருக்கோணமலையில் ஒருவரைப் போட்டியிடச் செய்யத் தீவிர முயற்சிசெய்து வருவதாகவும் அரசியல் வட்டாரங்களில் இருந்து பலத்த வதந்தி அடிபடுகின்றது.

## 'பரமானந்த ஸ்ரேடியம்'

கோப்பாய், ஞாயிறு

கோப்பாய் கிராமசபையாரால் அமைக்கப்பட்டு வரும் பொது விளையாட்டு மைதானத்துக்கு ''பரமானந்த ஸ்ரேடியம்'' எனப் பெயர் சூட்டப்படுமெனத் தெரியவருகிறது. இப்பெயர் சூட்டு விழா மைதானத் திறப்பு விழாவுடன் நடைபெறுமாம்.

— —

## காங்கிரஸுக்கும் ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

'இம்முறை காங்கிரஸ் பிரதிநிதிகளைப் பெரும்பான்மையினராக ஆட்சிமன்றத்துக்கு அனுப்பி தமிழர்பிரச்னைகளைக் கவனிக்க ஒருசந்தர்ப்பம் கொடுங்கள்.'

தீவுப்பகுதியில் எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழ் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிடவிருக்கும் வழக்கறிஞர் நா. த. சிவஞானம் நாரந்தனை வடக்கில் நடைபெற்ற காங்கிரஸ்கிளை அமைப்புக் கூட்டத்தில் உரைநிகழ்த்துகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும் தொடர்ந்து பேசுகையில் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் தமிழ் மாணவர்களில் பெரும்பான்மையினர் உளதால் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்திலேயே நிறுவப்படவேண்டும்எனக்குறிப்பிட்டார்.

— —

## தமிழரசு மாதா முன்னணி நிர்வாகிகள்

மாவிட்டபுரம், ஞாயிறு

தமிழரசு மாதர் முன்னணியின் காங்கேசன்துறைக் கிளையின் புதுவருட நிர்வாகிகள் தெரிவு நேற்று நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவி: செல்வி திலகமணி திருமால், உபதலைவி: செல்வி தவமணி சுப்பிரமணியம் செயலாளர்: செல்வி விஜயலட்சுமி குருசாமி, உபசெயலாளர்: செல்வி கலாவதி சிதம்பரன், பொருளாளர்: திருமதி ம. செல்வசிறி, உபபொருளாளர் செல்வி நாகரஞ்சினி நாகமுத்து மற்றும் ஐவர்கொண்ட செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

எடுத்துரைத்தவர் எமது உள்ளூராட்சி அமைச்சர் இங்கு நான் திறந்து வைக்கும் வார்ப்பு வீடுகளை எக்கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, அந்தத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினரே திறந்துவைக்க வேண்டுமென உத்தரவிட்ட பெருமை தேசிய அரசாங்கத்தின் அமைச்சர் பிரேமதாசாவைச்சாரும்' என்று வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் உள்ளூராட்சி வாரத்தையொட்டி முல்லைத்தீவில் சேரி ஒழிப்புத்திட்டத்தில் கட்டப்பட்ட ஐந்து வார்ப்பு வீடுகளைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

முல்லைத்தீவுப் பட்டணசபைத்தலைவர் இந்த வைபவத்திற்குத் தலைமைதாங்கினார்.

வவனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு கே, நல்லநாதன் இவ்வைபவத்தில் கலந்து கொண்டு பேசும் பேது, இவ்வைபவத்தையொட்டி அயராதுஉழைத்த ப. ச. தலைவருக்கும், அங்கத்தவர்கள், ப. ச. ஊழியர்கள் யாவருக்கும் நன்றி தெரிவித்தார்.

— —

## புதிய சமாதான நீதவான்

எழுதுமட்டுவாள் ஞாயிறு

மிருசுவில் வடக்கில் உள்ள சிறந்த சமூகத் தொண்டராகிய திரு. அ. குமாரசாமி யாழ்ப்பாணமாவட்டத்தின் மிருசுவில் பகுதி சமாதான நீதவானாக இம்மாதம் 3ம் திகதி அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பகுதியின் கிராம சேவகராகக் கடமையாற்றி இளைப்பாறிய இவர் இப்பகுதியின் கிராம அபிவிருத்தியில் மிகுந்த ஈடுபாடுடையவர். இவரின் இப்புதிய நியமனத்தையொட்டி மிருசுவில் வடக்கு கிராம முன்னேற்ற சங்கத்தினர் இம்மாதம் 11ம் திகதி ஒரு வரவேற்புபசாரம் அளித்தனர். இதில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு. வி என். நவரத்தினம் கலந்து கொண்டார்.

## தாமதம் ஏன்?

அனலைதீவு, ஞாயிறு

அனலைதீவு உப பால் கந்தோரால் காலை 11-30 மணிக்குஏற்கப்படும் பிறவூர் தந்திகள் பி. பகல் 2-30 மணிக்குப் பின்னரே பட்டுவாடாச்செய்யப்படுகின்றனவாம். இதனால் மக்கள் பெரும் கஷ்டமடைகின்றனர். இது குறித்து சம்பந்தப்பட்ட இலாகாவினர் நடவடிக்கை எதுவும்எடுகின்றார்களில்லையாம்.

## சிரமதான மூலம் ஆக்கவேலைகள் செய்தனர்

பருத்தித்துறை, ஞாயிறு

இப்பகுதிப் பாடசாலைகளெங்கும் கடந்ததிங்களன்று நடைபெற்ற சிரமதான இயக்கத்தில் ஆசிரியரும் மாணவரும் கலந்துகொண்டனர். பாடசாலை வகுப்பறைகளையும், சூழலையும் சுத்தம் செய்வதில் மட்டுமன்றி, சில ஆக்கபூர்வமான வேலைகளிலும் ஈடுபட்டனர்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும், புதிய அலுமாரிகள் செய்யப்பட்டதோடு பழுதடைந்த தளபாடங்களும திருத்தப்பட்டன. கரும்பலகைகளுக்கு மைதீட்டப்பட்டது. பருத்தித்துறை மெதடிஸ்த உயர்மகளிர் கல்லூரி, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, புலோலி இந்துக் கல்லூரி, தேவரையாளி இந்துக் கல்லூரி வதிரி திரு. இருதயக்கல்லூரி ஆகியவற்றிலும் சிரமதானம் சிறப்பாக நடைபெற்றது.

— —

## வேலையற்ற பட்டதாரிகள் போட்டியிடுவார்

மல்லாகம், ஞாயிறு

எதிர்வரும் பொதுத்தேர்தலில் நல்லூர் சாவகச்சேரி வட்டுக்கோட்டை ஆகிய மூன்றுதேர்தல் தொகுதிகளிலும் நிறுத்தவிருக்கும்தமது சங்க சார்பிலான அபேட்சகர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அகில இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்க நிர்வாகசபை அங்கத்தவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 21-ம் திகதி யாழ்ப்பாணத்தில் கூடவிருக்கும் சங்க செயற்குழுக் கூட்டத்தில் ஏனைய தொகுதிகளின் அபேட்சகர் தெரிவு தேர்தல் விஞ்ஞாபனம்ஆகியனபற்றி ஆலோசனை செய்யப்படவிருக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

— —

## திருவள்ளுவர் விழா

கோப்பாய், ஞாயிறு

எதிர்வரும் 23-ம் திகதி நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக் கழகத்தாரால் இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய மண்டபத்தில் திருவள்ளுவர் விழாச்சிறப்பான முறையில் கொண்டாடப்படவுள்ளது.

கழகத்தலைவர் திரு கே. சொக்கலிங்கம் தலைமையில் இவ்விழா நடைபெறும்.

செய்துள்ளனர். இலங்கையின் ஏனைய பாகங்களுக்குச் செல்லும் மெயில் வண்டிகளில் சகல வசதிகளும்செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன.

யாழ்தேவி, உத்தரதேவி, இரவு மெயில்வண்டிகளில் ஆசனங்கள் இல்லாதபடியால், தேநீர் பருகுவது கூடக் கஷ்டமாயிருக்கிறதென்றும், வண்டி ஆட்டத்தில் உடைகளில் பானம் கொட்டி பல அசெளகரியங்கள் ஏற்படுகிறதென்றும் பிரயாணிகள் புகார் செய்கின்றனர்.

இவ்வண்டிகளில் மதுப்பிரியர்களுக்குமாத்திரம்விசேஷ சலுகைகள் அளிக்கப்படுகின்றனவாம்.

— —

## விளையாட்டுத்துறை கல்வி ஆலோசகர்

யாழ்ப்பாணம். திங்கள்

யாழ்ப்பாண மாவட்ட கல்வி இலாகாவில்விளையாட்டுப் பகுதி வித்தியாதிகாரியாக கடமையாற்றும் திரு. ஆர் எஸ் சீவரத்தினம் இம்மாதம் முதல் கல்வி ஆலோசகராக நியமனம் பெற்றுள்ளார் இவர் எட்டு மாவட்டங்களுக்கு விளையாட்டுத்துறை ஆலோசகராகப் பொறுப் பேற்றுள்ளார்.

திரு சீவரத்தினம் சுமார் இருவருட காலமாக அவுஸ்திரேலியாவில் பயிற்சி பெற்றவர். (மல். நி)

— —

## புதிதாகப் பதியப்பட்ட விவாகங்கள்

எழுதுமட்டுவாள், ஞாயிறு

இயக்கச்சி கிராமசபைக்குட்பட்ட பகுதியில் பதிவு செய்யப்படாமலிருந்தவிவாகங்கள் பதிவுசெய்யப்பட்டன. கிராமசபை மண்டபத்தில்வைத்து நடைபெற்ற இப்பதிவின்போது வடமாகாண அரசாங்க அதிபர், வடபிரதேச பதிவுக்காரர், பச்சிலைப்பள்ளிக் காரியாதிகாரி ஆகியோர் பிரசன்னமாயிருந்தனர்.

## தும்புத் தொழிற்சாலை

எழுதுமட்டுவாள், ஞாயிறு

எழுதுமட்டுவாள் வடக்கில் கிராம முன்னேற்றச் சங்கத்தினரின் முயற்சியால் சிரமதான மூலம் அமைக்கப்பட்ட தும்புத் தொழிற்சாலைக்கான கட்டிடம் விரைவில் திறக்கப்படவிருக்கின்றது. தும்புத் தொழிற்சாலை அமைக்கப்பட்டதும் பெருந்தொகையானவர்களுக்கு வேலை வசதி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கு ஆசியாவில் கொந்தளிப்பு எந்த நிமிடத்திலும் வெடிக்கலாம்

## ஜோர்டான் மன்னர் எச்சரிக்கிறார்

அம்மான், பெப். 15

மேற்காசியாவில் இப்பொழுது இடம்பெற்றுவரும் சம்பவங்கள் அங்கு அமைதியேற்படுவதற்கான சாத்தியக்கூறுகளை வெகுவாகக் குறைத்துக்கொண்டு வருவதாக ஜோர்டான் மன்னர் ஹுசேன் கூறினர்.

பத்திரிகை நிருபர்கள் மத்தியில் பேசிய ஜோர்டான் மன்னர் மேற்காஸியாவில் பெரும் கொந்தளிப்புஒன்று மீண்டும் வெடிக்கும் நிலை உருவாகியுள்ளதாக எச்சரித்தார்.

அமெரிக்க ஆயுத உதவிகள் இஸ்ரேலுக்கு ஊக்கமளிப்பதாகவிருக்கின்றன வென்றும் மன்னர்ஹுசேன் குறிப்பிட்டார்,

சமீப நாட்களில் ஜோர்டானில் பாலஸ்தீனக் கொமாண்டோக்களுக்கும் உள்நாட்டுப் பாதுகாப்புப் படைக்குமிடையில் ஏற்பட்ட மோதல்கள் தப்பபிப்பிராயத்தின் காரணமாக ஏற்பட்டவை என்று மன்னர் விளக்கினர்.

உள்நாட்டுப் பாதுகாப்பை உத்தேசித்து ஆயுதங்களைச் சேர்த்து வைப்பதற்கும் கொண்டுசெல்வதற்கும் அம்மானில் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. ஜோர்டான் அரசின் இந்த நடவடிக்கை கொரில்லா நடவடிக்கைகளுக்கு எதிரானது என்று பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

தங்கள் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டால் எதிர் நடவடிக்கைகளில் இறங்க நேரிடும் என்று அவர்கள் எச்சரித்தனர். ஜோர்டானில் உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டால் அதற்கு ஜோர்டான் அரசுதான் பொறுப்பேற்க வேண்டியிருக்கும் என்று அவர்கள் அறிவித்தனர். அதைத் தொடர்ந்து பாலஸ்தீன கொரில்லா இயக்கத்தினர்களுக்கு ஜோர்டான் படைகளுக்குமிடையில் மோதல்கள் ஏற்பட்டதாக செய்திகள் வந்தன.

இந்த மோதல்கள் தப்பபிப்பிராயத்தின் காரணமாக இடம்பெற்றிருப்பதாக மன்னர் ஹுசேன் பத்திரிகை நிருபர்களிடம்தெரிவித்தார்.

உள்நாட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும்படி அவர் கொமாண்டோ இயக்கங்களைக் கேட்டுக்கொண்டார்.

லெபனுன் அரசுடன் மேற்காஸிய நிலைமை குறித்து ஆலோசனைகள் நடத்துவதற்காக ஜோர்டான் மந்திரிகள் இருவர் பேரூட் சென்றிருப்பதாகத் தெரிகின்றது.

இஸ்ரேலியரும் ஜோர்டானியரும் இன்றுபல முனைகளில் மோதிக்கொண்டதாக செய்திகள் வந்துள்ளன.

.........

## மேற்கு வங்கத்தில் காட்டுத் தர்பார்

### முதலமைச்சர்மீதே கல்வீச்சு

கல்கத்தா, பெப். 15

வங்காள முதலமைச்சர் திரு. அஜாய்குமார் முகர்ஜி நேற்று கல்வீச்சுக்குள்ளாகி காயமெதுவும் இல்லாமல் தப்பினர்.

பாங்ளா காங்கிரஸ் கூட்டமொன்றில் திரு. முகர்ஜி பேசிக்கொண்டிருந்தபொழுது கல்வீச்சு நடைபெற்றது. இந்தக் கல்வீச்சினல் கூட்டத்திலிருந்த பலர் காயமடைந்தார்கள்.

திரு. முகர்ஜி பேசுகையில் ...

ஒருவர் ஆட்சேபித்தார். காட்டுத்தர்பார் நடப்பதாகக்கூறியதை விளக்கும்படி அவர் முதலமைச்சரைக் கேட்டார். தம் ஏற்கனவே இதுபற்றி சட்டசபையிலும் வேறு இடங்களிலும் விளக்கியிருப்பதாக திரு. முகர்ஜி கூறினர். அதைத் தொடர்ந்து கூட்டத்தின் மீது கற்கள் சரமாரியாக வீசப்பட்டன. கூட்டத்தினர் பலர் காயமடைந்தார்கள். மேடையிலிருந்தவர்களுக்கும் கல்வீச்சு நடந்தது. ஆனல் திரு. முகர்ஜி ...

## வளையல்கள் கொடுத்த வனிதையர்

ராஜ்காட் பெப். 15

'எண்ணெய் விலையைக் ...

## கிராமங்கள் தோறும் உள்ளூராட்சி வாரம்

கைதடி, ஞாயிறு

நாவற்குழிக் கிராமசபை உள்ளூராட்சி வாரவிழாவையொட்டி பல நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

சமய நிகழ்ச்சிகள் தினமான முதல்நாள் இங்குள்ள சகல மத ஆலயங்களிலும் விசேட பூசை ஆராதனைகள் நடைபெற்றன. அன்றுமாலை கோயிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாசாலை மண்டபத்தில் திரு. என். பொன்னம்பலம் தலைமையில் பல சமய நிகழ்ச்சிகளை நாவற்குழிக் கிராம சபைத்தலைவர் திரு. எஸ். சடாட்சரம் ஆரம்பித்துவைத்தார்.

சங்கீதபூஷனம் திரு. சி. விநாசித்தம்பியின் சொற்பொழிவும், ஸ்ரீ முருகன் ச. ச. நிலையம், காவடி, நடனமும் இடம்பெற்றன.

தொழில் மகத்துவதினமான அடுத்தநாள் நாவற்குழிக் கிராம சபைத்தலைவர் திரு. எஸ். சடாட்சரம் தலைமையில் நாவற்குழி மகாவித்தியாலயத்தில் சிரமதான வேலைகள் பல நடைபெற்றன.

சுகாதார ஆரோக்கியதினமான 10ந் திகதி நாவற்குழி மகாவித்தியாலய மண்டபத்தில் கிராம சபைத் தலைவரின் தலைமையில் நடந்த கூட்டத்தில் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்ட திருமதி டாக்டர் வி. சுப்பிரமணியம் 'சிசுபரிபாலனம்' பற்றி உரைநிகழ்த்தினர். சுகாதார சம்பந்தமான நிழற்படக்காட்சியும் இடம்பெற்றன.

சேரிஒழிப்பு, வீடமைப்புத் தினமான 11ம் திகதி நாவற்குழி மகாவித்தியாலய அதிபர் திரு. ஆர். கந்தையா தலைமையில் பல சிரமதான ...

... களிலும் ஆராதனையுடன் உள்ளூராட்சிவாரக் கொண்டாட்டங்களை ஆரம்பித்தது.

தொழில் மகத்துவதினத்தையிட்டு மேற்படி கிராம சபையின் உபதலைவர் திரு. எம். கந்தையா தலைமையில் வேம்போடுகேணி, கிளாலி, இத்தாவில் வண்ணுங்கேணி ஆகிய இடங்களில் பல சிரமதான வேலைகள் இடம்பெற்றன.

சுகாதார ஆரோக்கிய தினத்தையிட்டு, ப஌ சுகாதாரப் பரிசோதகர் திரு. எஸ். வேலாயுதம் தலைமையில், இத்தாவில் சரஸ்வதி சன சமூக நிலையத்தினா, சுகாதார விதிகள் பற்றிய கலைநிகழ்ச்சிகளை அளித்தனர் அறிவுரைகளும், விளம்பரங்களும் விநியோகிக்கப்பட்டன.

சேரிஒழிப்பு வீடமைப்புத் தினத்தையிட்டு முகமாலைக் கிராமசபைஉறுப்பினர் திரு. ஏ. ஸ்ரனிஸ்லாஸ் தலைமையில் பல சிரமதான வேலைகள் நடைபெற்றன.

நூல்நிலைய இலக்கியவிழாவையிட்டு இத்தாவில்கிராம முன்னேற்றச்சங்கக் காரியதரிசி திரு எஸ். மார்க்கண்டு தலைமையில் வேம்போடு கேணி சி. சி. ரி எம். பாடசாலை மண்டபத்தில் முகமாலைக் கிராமசபை எல்லைக்குட்பட்ட பாடசாலை மாணவமாணவிகளின் கலை, இலக்கிய கருத்தரங்கு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன

கலாச்சார விழா விளையாட்டுத்தினத்தையிட்டு ப஌ விளையாட்டு அமைப்பாளர் திரு. ரி. சவரிமுத்து தலைமையில் இத்தாவில் முருகமூர்த்தி யாலயத் திறந்தவெளியரங்கில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

அன்று இரவு முகமாலை கிராமசபை உறுப்பினர் திரு வி. நாகலிங்கம் தலைமையில் சுண்டிகுழி நாடக கலாமன்றத்தாரின் அடங்காப்பிடாரி நாடகமும், கிளாலி சென் மைகல் நாடக மன்றத்தாரின் கைதியின் காதலி என்னும் நாடகமும் இடம்பெற்றன.

சமுதாய தினத்தையிட்டு கிராமசபை மண்டபத்தில் மேற்படி சபைத்தலைவர் திரு. எஸ். சின்னத்துரையின் தலைமையில் நடந்த கூட்டத்தில் பச்சிலைப்பள்ளி காரியாதிகாரி திரு எஸ். அருணசலம் பிரதமவிருந்தினராகவும் யாழ்ப்பாண உள்ளூராட்சி ஆய்வு உத்தியோகத்தர் திரு எஸ். ஜெகதீஸ்வரன் பிரதம பேச்சாளராகவும் கலந்து கொண்டனர்.

பாடசாலை கலை கருத்தரங்குகளிலும் விளையாட்டுப் போட்டிகளிலும் வெற்றி பெற்றோர்களுக்கு திருமதி எஸ் அருணசலம் பரிசில்களை வழங்கினர். யாழ் மாவட்ட உள்ளூராடசிவார செயலாளர் திரு எம். எஸ். அமரசிங்கம் நன்றியுரையுடன் முகமாலைக் கிராம சபையின் உள்ளூராடசி வாரம் முடிவுற்றது.

## கிராமங்கள் தோறும் நூல் நிலையங்கள் நிறுவவேண்டும்

யூதர்களுக்கு

## மேற்கு ஜெர்மன் பிரதமர் கவலை

பெர்லின், பெப் 15

மேற்கு ஜெர்மனியில் தீவிபத்தொன்றில் யூதர் குடும்பமொன்றின் 7பேர் மரணமானது குறித்து மேற்கு ஜெர்மன் பிரதமமந்திரி வில்லி பிரான்ட்கவலை தெரிவித்திருக்கிறர்.

யூதவணக்க ஸ்தலத்துக்கு தீவைக்கப்பட்டதால் இருவர்கள் மரணமானதாகத் தெரிகின்றது.

மூனிச் விமானநிலையத்தில் சமீபத்தில்இஸ்ரேலிய விமானப்பிரயாணிகள்மீது குண்டு வீசப்பட்ட சம்பவத்துக்கு உரிமைகொண்டாடியகொரில்லா இயக்கத்தினர் இந்தத் தீவைப்புசம்பவத்துக்கும் தமக்கும் ஒன்றும் தெரியாது என்று அறிவித்துள்ளனர்.

ஏற்கனவே இடம் பெற்ற இந்தவிமானநிலைய சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டார் பலர் காயமடைந்தனர் இதுசம்பந்தமாக மூன்று அரபுக்கள்மீதுகொலைக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

0 0 0

## பியாப்ராவில் இன அழிப்பு அறிகுறியே இல்லை

### பார்வையாளர்கள் பாராட்டு

லேகோஸ் பெப்15

பியாப்ராவில் இன அழிப்பு நடவடிக்கை எதிலும் நைஜீரிய இணைப்பாட்சிப் படைகள் ஈடுபடவில்லையென்று சர்வதேச இராணுவப் பார்வையாளர்கள் மீண்டும் ஊர்ஜிதம் செய்திருக்கிறர்கள்.

பியாப்ரா வீழ்ச்சியடைந்ததும் அங்கு இனஒழிப்புநடவடிக்கைகளில் நைஜீரிய படைகள் இறங்கக்கூடும் என்று அஞ்சப்பட்டது. இன ஒழிப்பு நடவடிக்கைகளில் இறங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று போப்பாண்டவரும் நைஜீரிய தலைவர்களைக் கேட்டுக்கொண்டார். ஆனல் அப்படியான இன ஒழிப்புநடவடிக்கை எதிலும் நஜைீரியபடைகள் இறங்கியதாக தகவலேதும் இல்லையென்று செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள் உட்பட சர்வதேசப் பத்திரியாளர்கள் பலர் கருத்து வெளியிட்டிருந்தார்கள். சர்வதேச ராணுவப் பார்வையாளர்களும் இதையே முன்னரும வெளியிட்டிருந்தார்கள்,

இப்பொழுது சர்வதேச ராணு பார்வையாளர்குழு வெளியிட்டிருக்கும் தனது இறுதி அறிக்கையில் பியாப்ராவில் இனஒழிப்புக்கான எதுவித அறிகுறியும் தென்படவில்லையென்றும் ஆனல் சிப்பாய்கள் ஆங்காங்கேகற்பழித்தலிலும் கொள்ளையடித்தலிலும் இறங்கிய சில சம்பவங்களைத் தவிரவேறு எதுவும் இடம் பெறவில்லையென்றும் தெரிவித்துள்ளனர் வீழ்ச்சியுற்றமக்கள்மீது சில தனிப்பட்ட கோஷ்டிகள் தாக்குதல்கள் நடத்திக் கொள்ளையடிக்க முயற்சிகள் செய்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்திருப்பதாகத் தெரிகின்றது.

"கி. சபைகளும் ச. ச. நிலையங்களும்

## இலக்கிய வளர்ச்சிக்கு வழிசெய்ய வேண்டும்"

வேலணை, ஞாயிறு

பாடசாலைகளில் மாணவர்கள் விஞ்ஞானக்கல்வியில் முக்கிய கவனம் செலுத்துவதால் இலக்கியங்களைப்படித்தறியும் வாய்ப்பு இல்லாமல் போகிறது. கிராமசபைகளும் அதன்கீழ் இயங்கும் சனசமூகநிலையங்களும் இலக்கிய விழாக்களை நடத்திபாடசாலைகளுக்குப் புறம்பான ...

... கப்பட்டுள்ள இம்மத்திய நூல்நிலையத்திற்கு 5000 ரூபா நன்கொடை கிடைக்கப்பெற்று 15,000 ரூபா பெறுமதியான கட்டிடத்தைக்கட்டிமுடித்த திறமைக்கு வேலணை கிராம சபைத் தலைவரைப் பாராட்ட வேண்டும். புத்தகங்களும், பத்திரிகைகளும் நூல் நிலையத்தில் இருந்துவிட்டால் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருங்க பலர் காயமடைந்தார்கள்.

திரு. முகர்ஜி பேசுகையில் ராஜ்யத்தில் காட்டுத் தர்பார் நடப்பதாகக் குறிப்பிட்டதை கூட்டத்திலிருந்தகள். மேடையிலிருந்தவர்களுக்கும் கல்வீச்சு நடந்தது. ஆனால் திரு. முகர்ஜி காயமெதுவுமின்றி தப்பினர்.

# 'தமிழ் மட்டும் போதனா மொழியாக இருக்கக்கூடாது'

## வடமாகாண கல்லூரி அதிபர்கள் சங்கம் சாட்சியம்

யாழ்ப்பாணம், திங்கள் 'கொழும்பு பேராதனை ஆகிய இடங்களிலுள்ளது போன்று மேலும் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு உத்தேசித்துள்ள அரசாங்கத்தின் கொள்கையை நாம் வரவேற்பதுடன் நீடாம், குணவர்த்தன ஆகிய இரு கமிஷன்களும் ஏற்கனவே திட்டவட்டமாகத் தெரிவித்துள்ள கருத்துப்படி யாழ்ப்பாணத்திலேயே அமைக்கப்படவேண்டும் என்றே நாமும் வற்புறுத்துகின்றோம்'

இவ்வாறு வடமாகாண கல்லூரிகள் அதிபர்கள் சங்கப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வந்துள்ள பல்கலைக்கழக விசாரணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்கையில் நேற்றுத் தெரிவித்னர்.

வண்ணை வைத்தீஸ்வராகல்லூரி அதிபர் திரு. எஸ் சிவபாதசுந்தரம் தலைமையில் இச்சங்கத்தினர் சாட்சியமளித்தனர். மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. ரி. ரி. ஜெயரத்தினம், சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் திரு.கே. பூரணம்பிள்ளை, வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் செல்வி தம்பையா மத்திய கல்லூரி அதிபர் திரு. சபாலிங்கம், திரு எஸ் பாஸ்கரலிங்கம் ஆகியோரும் இப்பிரதிநிதிகள் குழுவின் சார்பில் வந்திருந்தனர்

இச்சங்கத்தினர் மேலும் தமது சாட்சியத்தின்போது கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவேண்டும் எனக்கோரும் பல்கலைக்கழகத்திற்குத் தற்போது கொழும்பு பேராதனை பல்கலைக்கழகங்களுக்கு போல பெயர் 'இலங்கைப் பல்கலைக்கழகம்- யாழ்ப்பாணம்' என அமையவேண்டும். புதிய பல்கலைக்கழகத்தில் அரசியல், இன ரீதியில் தொடர்புகள் இருத்தல் கூடாது. வடக்கு கிழக்கு என மாணவர்களைப் பாகுபாடுகாட்டி அனுமதி வழங்குதல் கூடாது. இன, மத. மாவட்ட அடிப்படையில் மாணவர்களைப் பிரித்து வைத்தல் பெரும் அபாயத்தை ஏற்படுத்தக்கூடியது வகுப்புவாத உணர்ச்சியை மாணவர்களிடையே வளர்த்தல் தீங்கை விளைவக்கும். இதனால் மாணவர்களின் பிற்கால வாழ்வும் பாதிக்கப்படும் ஒரு நாட்டுப் பிள்ளைகள் என்ற உணர்வுடன் புதிய பல்கலைக்கழகத்தில் கல்விப் போதனை அமையவேண்டும்.

தகுழந்க்கு மட்டுமின்றித் தமிழ்மொழி மட்டும் போதனா மொழியாகக் கொண்டு பல்கலைக்கழகம் நிறுவக்கூடாது. இவ்வகையில் பல்கலைக்கழகம் அமைப்பதால் தற்போது ஒரு சிலரை திருப்திப்படுத்த முடியும். ஆனால் வருங்கால சமூகத்தினருக்கு இதுபெரும் அபாயமாக அமையலாம், தற்போது நமது பல்கலைக்கழகங்களில் நிலவும் குழப்பகரமான நிலையை நாம் நன்கு அறிவோம். புதிய பல்கலைக்கழகம் இக் குழப்பகரமான நிலையை மேலும்வளர்க்க வசதி செய்வதாக இருத்தல் கூடாது. இதனைக் கருத்தில் கொண்டு நல்ல சூழ்நிலையில் அமைத்தல் அவசியம்.

புதிய பல்கலைக்கழகம் நிறுவப்பட்டதும் வடக்கு கிழக்குபகுதிகளிலிருந்து கொழும்பு,பேராதனைப் பல்கலைக்கழங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும்நடைமுறையை நிறுத்துதல் கூடாது. திறமை அடிப்படையில் தற்போதுள்ளமாதிரி சமூக, சமய வேறுபாடுகளின்றிபல்கலைக்கழக மாணவர் தெரிவு தொடர்ந்து பின்பற்றப்படுதல் வேண்டும்.

நீடாம், குணவர்தன கமிஷன்களின் கருத்துப்படி பல்கலைக்கழகம் புதிதாகஅமைக்கப்பட்டதும் முதலில் தென்பகுதியிலேயே உயர்தர் அரசாங்க பாடசாலைகள் பல்கலைக்கழக அந்தஸ்திற்கு உயர்த்தப்பட வேண்டும். இதன் பின்னரே கிழக்கு மாகாணத்தில் பல்கலைக்கழக அந்தஸ்திற்கு பாடசாலைகள் உயர்த்தப்பட வேண்டும்.

(மல்லா: திரு.)

ராஜ்காட் பெப். 15 'எண்ணெய் விலையைக் குறைக்க வேண்டுமென்றும் குடிநீர் வசதிசெய்து கொடுக்கவேண்டுமென்றும் கோரி ஊர்வலமாக வந்த பெண்கள் சிண்டிகேட் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த குஜராத் மாநில முதலமைச்சர் பி. ஜே படடேலைச் சந்தித்து தங்கள் கோரிக்கையைத் தெரிவித்தனர்.

திரு. பட்டேல் இந்தக் கோரிக்கைகளைத்தாம் நிறைவேற்ற முடியாத நிலையிலிருப்பதாகக் கூறினர்

உடனே அப்பெண்கள் தாங்கள் அணிந்திருந்த வளையல்களையெல்லாம் கழற்றி அவரை அணிந்துகொள்ளும்படி கூறிவிட்டுச் சென்றுவிட்டனராம்

குழி மமாவித்தியாலய அதிபர் திரு. ஆர். கந்தையா தலைமையில் பல சிரமதான வேலைகள் நடைபெற்றன.

12ம் திகதி நடைபெற்ற நூல்நிலைய இலக்கிய விழாவில் கிராமசபைத் தலைவர் சபை மண்டபத்தில் நூல் நிலையத்தை ஆரம்பித்து வைத்தார.

கலாச்சார விழாவும் விளையாட்டுத்தினமுமான 13-ம் திகதி முன்னாள் ச. ச. தலைவர் திரு. எஸ். விசாகப் பெருமாள் தலைமையில் நாவற்குழி மகாவித்திபாலய விளையாட்டரங்கில் பல விளையாடடு நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

### முகமாலையில்

முகமாலைக் கிராம சபைத் தலைவர் திரு. எஸ். சின்னத்துரை தலைமையில் சபை எல்லைக்குட்பட்ட சகல ஆலயங்

# 'வடபகுதியில் நிறுவினால் ஏழைமாணவர்பயனடைவர்'

## யாழ். இந்து கல்விச்சபை

யாழ்ப்பாணம், திங்கள் கல்வி சரித்திர சம்பந்தமான காரணங்களை முன்னிட்டு உத்தேச பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படல்வேண்டும் பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் தமிழ்மாணவர்களில் பெரும்பான்மையானோர் யாழ்ப்பாணத்திலேயே இருந்து செல்கின்றனர் ஆதலால யாழ்ப்பாணத்தில்தான் நிறுவப்படவேண்டும் யாழ்ப்பாணம் இந்துக் கல்விச்சபையினர் சாட்சியமளித்தபோது மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இக்குழுவில் முன்னாள வைத்திஸ்வராக்கல்லூரிஅதிபர் திரு எஸ் அம்பிகைபாகன், டாகடர் வி எம் பசுபதி, அகில இலங்கை காந்திசேவா சங்கத் தலைவர் முதலியார் எஸ் சின்னத்தம்பி, வழக்கறிஞர் ஆர் என் சிவப்பிரகாசம் ஆகியோர் வந்திருந்தனர்

கமிஷன் உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கு குழுவினர் பதிலளித்தனர், இக் குழுவினர் மேலும் தெரிவித்ததாவது;-

1959-ம் ஆண்டில் தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தினர் தமிழ்ப்பல்கலைக்கழகம் வேண்டுமெனக் கோரிய போது காலஞ்சென்ற எஸ் டபிள்யு ஆர் டி பண்டாரநாயக்கா யாழ்ப்பாணத்தில் கலாச்சார பல்கலைக்கழகமொன்றை நிறுவுவதற்கு உடன்பட்டார் காலஞ்சென்ற திரு எஸ் நடேசன் பண்டாரநாயக்காவின் உடன்பாட்டுக்கு சம்மதம் தெரிவித்து கலாச்சார பல்கலைக்கழகம் நிறுவுவதற்கு இராமநாதன் கல்லூரி பரமேஸ்வராக்கல்லூரி ஆகியவற்றையும் அதன் சொத்துக்களையும் அளிப்பதற்கு உடன்பட்டார்

மேலும் பூரணத்துவம் வாய்ந்த பல்கலைக்கழகமொன்றை நிறுவுவது என்ற தற்போதைய அரசாங்கத்தின் தீர்மானத்தை நாங்கள் வரவேற்கிறோம் இதில் இந்துசமயம், தத்துவம், தமிழ்,கலாச்சாரம் ஆகியன விசேஷமாகக் கற்பிக்கப்படவேண்டும் கல்வி, சரித்திர சம்பந்தமான காரணங்களை முன்னிட்டு உத்தேச பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில நிறுவப்படலவேண்டும் சுவாமி விபுலானந்தாவின் கட்டுரை. நீட்ஹாம். குணவர்த்தன கமிஷன்களின் அறிக்கை ஆகியனவும் இங்கு குறிப்பிடவேண்டியவை

பல்கலைக்கழத்துக்குச்செலலும் தமிழ்மாணவர்களில பெரும்பான்மையினோர் யாழ்ப்பாணதிலேயே இருந்து செலகிறார்கள் ஆதலால உத்தேச பலகலைக்கழகம் யாழ்ப்பாணத்திலேயே நிறுவப்படவேண்டும் இங்கிருந்து பலகலைக்கழகத்துக்குச் செல்லும் ஏழை மாணவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாகும். பல்கலைகழகத்துககு தகுந்த கட்டிட நிலவசதிகளும் யாழ்ப்பாணத்தில் உள்ளன. (மல்.நி)

# நிலையங்கள் நிறுவவேண்டும்

மல்லாகம். ஞாயிறு ''கிராமங்கள்தோறும் நூல்நிலையங்களை அமைத்து மக்களின் அறிவுப் பசியைப் போக்க வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையாகும். தேசிய அரசாங்கம் இதனை உணர்ந்து உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் நூல் நிலையங்களை கிராம ரீதியில் நிறுவிவருதல் வரவேற்கத்தக்கது. மக்கள் இவ்வாய்ப்பைத் தகுந்த முறையில் பாவித்து அறிவினை வளர்த்தல் அவசியம்.''

உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. ஏ.ஏ. யோசெப் நெல்லியடி பட்டினசபையின் நூலக இலக்கிய விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர். திரு. எஸ் வைத்திலிங்கம் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

கவிஞர் வீ. கந்தவனம் பேசுகையில் இன்று தோன்றி நாளை மறையும் படைப்புக்களை படைக்கும் எழுத்தாளர்கள உண்மையான எழுத்தாளர்களாக மாட்டார்கள். காலத்தால்அழியாத-வாழும் காலத்தைப் பிரதிபலிக்கும் இலக்கியங்களையே இலக்கிய கர்த்தாக்கள் உருவாக்க வேண்டும் என்றார்.

எழுத்தாளர்களின் நூல்களை படிக்காது விமர்சனம் செய்யும் பொறுப்பற்ற விமர்சகர்கள் ஒதுக்கப்படவேண்டுமென கவிஞர் காரை. சுந்தரம்பிள்ளை குறிப்பிட்டார்.

யாழ்வாணன் எழுதிய 'அமரத்துவம் நூலின் அறிமுக விழாவும் இடம்பெற்றது. வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி அதிபர் எம். எஸ். சினித்தம்பி, பண்டிதர் கணபதிப்பிள்ளை ஆகியோரும் பேசினர்.

# 'யாழ். மாவட்டத்தில் தான் சிறந்த சனசமூக இயக்கம்'

யாழ்ப்பாணம், ஞாயிறு ''மக்கள் உள்ளூராட்சி மன்றங்களுடன் இணைந்து செயலாற்றி, கடமையுடன் ஒத்துழைத்து நாட்டையும் தாம் வாழும் பகுதிகளையும் அபிவிருத்தியடையவும் முன்னேற்றம் பெறவும் உழைத்தல்வேண்டும்.'' இவ்வாறு மேலதிக மாவட்ட நீதிபதி திரு. ஆர். பரமகுரு யாழ். நகரமண்டபத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி வார கலாச்சார-விளையாட்டுவிழா யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜ விழா ஆகியவற்றில் கலந்து கொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் திரு பரமகுரு மேலும் கூறியதாவது; மக்கள் ஒன்றாக இணையவேண்டும் என்ற விருப்பத்தின்பேரில் உள்ளூராட்சிவாரத்தை தேசிய அரசாங்கம் கொண்டாடுகின்றது கிராமங்களில் சிறந்த முறையில் சனசமூக நிலையங்கள் இயங்குகின்றன என்பதை கலாச்சார. விளையாட்டு நிகழ்ச்சிகளின் உயர்ந்த தரத்திலிருந்து தெரிகிறது. பணவசதிகள் குறைவான போதிலும் சனசமூக நிலையங்கள் தரமான வகையில் கடமை புரிவது பாராட்டத்தக்கது மக்கள் உள்ளூராட்சி மன்றங்களில் கூடிய ஆர்வம் செலுத்தி எல்லாத் தேவைகளையும் அரசாங்கம் பூர்த்திசெய்து வைக்கவேண்டும் என எதிர்பார்த்திராது பொதுநல சேவையில் மக்களும் சேர்ந்து உழைத்தல்வேண்டும். தேர்தலில் வாக்களித்தவுடன் கடமைநிறைவேறியதாகக் கருதாது மக்கள் உள்ளூராட்சி மன்றங்கள திறமையாக சரியாக இயங்குகின்றனவா எனக் கூர்ந்து கவனித்து நாட்டை வளர்த்தல் மக்கள கடமையாகும்.

உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு.ஏ. ஏ. யோசேப் வரவேற்புரை நிகழ்த்துகையில் இலங்கையில் யாழ். மாவட்டத்திலேயே சிறந்த முறையில் சனசமூக நிலைய இயக்கம் இயங்கி நடைமுறையில் இருந்து வருவதாகக் குறிப்பிட்டார்.

விழாவில் பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்ட உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம். பியுமான திரு. மு. சிவசிதம்பரமும், சாவகச்சேரி எம். பி. திரு. வ. ந. நவரத்தினமும் பரிசில்களை வழங்கினர்.

சமாஜச் செயலாளர் திரு. எம். செல்வராசா நன்றியுரை கூறினர். (மல். நி.)

## ஆய்வுகூடம்

மாவிட்டபுரம், ஞாயிறு இளவாலை கொன்வென்ற் மகாவித்தியாலயத்தில் பல ஆயிரம் ரூபா செலவில் விஞ்ஞான ஆய்வுகூடம் ஒன்று அமைக்கப்பட இருக்கிறது.

சனசமூகநிலையங்களும் இலக்கிய விழாக்களை நடத்திபாடசாலைகளுக்குப் புறம்பான மாணவர்களுக்கிடையே இலக்கியம் வளர்ச்சியடைய வழிசெய்தல் வேண்டும்.

முதியவர்களும் இலக்கியத்தை சுவைக்கும் சந்தர்ப்பம் இவற்றால் உண்டாகிறது. இந் நல்ல இயக்கத்தை உள்ளூராட்சி வாரத்தில் மாத்திரம் செயல்படுத்துவதுடன் நின்றுவிடாமல் ஒவ்வொரு மாதந்தோறும் இங்ஙனம் கொண்டாடுவது ஸ்தல ஸ்தாபன சபைகளின் ஒரு பெரும் சேவை என மதிக்கப்படும் என உள்ளூராட்சி வாரத்தையொட்டி வேலணைக் கிராம சபை கொண்டாடிய 5-ம் நாள் நிகழ்ச்சியாக வேலணைக் கிராமச்சபை பொது நூல் நிலைய மண்டபத்தில் நடைபெற்ற இலக்கிய நூல் நிலைய கருத்தரங்கின்போது தலைமை வகித்துப் பேசிய வேலணை மத்திய மகா வித்தியாலய அதிபர் திரு ஜே. எச். அரியரத்தினம் கூறினர்

கிராமசபைத் தலைவர் திரு க. சதாசிவம் பேசுகையில் கூறியதாவது:

உள்ளூராட்சி வார விழா கொண்டாட்டத்தை ஏற்படுத்தி மக்கள் மத்தியில் இத்தகைய இலக்கிய ரசனையை ஊட்டவும் பிறருக்குப் பயன்பட வாழும் பழக்கத்தை உண்டு பண்ணவும் அதற்குரிய பிரச்சாரங்களை செய்ய சந்தர்ப்பமளித்த உள்ளூராட்சி அமைச்சர் திரு பிரேமதாசாவைப் பாராட்ட மக்கள்கடமைப்பாடுடையவர்களாவர். மந்திரிபதவி ஏற்ற இரண்டு ஆண்டுகளுக்கிடையில் இலங்கையின் பலகிராமங்களுக்கும்சென்று ஆங்காங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து உதவியளித்ததும் தமது விஜயத்தின்போது மந்திரிசபைக் காரியாலய உத்தியோகஸ்தர்களை அழைத்துச் சென்று அவர்களுக்கும் அந்த உணர்வை ஊட்டியதற்கும் அவரை நாம் பாராட்டாமலிருக்க முடியாது. ஆரம்பத்தில் இந்த இயக்கங்கள் விரிந்த அளவில் நிகழ வசதியில்லாதிருந்தாலும் காலம்செல்ல இத் திட்டம்பாராட்டற்குரியதொன்றாக வளர்ச்சியடையு மென்பதில் ஐயமில்லை என கூறினர்

''ஏறக்குறைய அரை நூற்றுண்டுகளாக கிராம சபை சார்பில் நூல்நிலையம் ஒன்று அமைக்கப்படவேண்டுமென மேற்கொள்ளப்பட்ட முயற்சி இப்போதுதான் நிறைவேறியுள்ளது மந்திரிபிரேமதாசாவினால் திறந்துவைக்

வேண்டும். புத்தகங்களும், பத்திரிகைகளும் நூல் நிலையத்தில் இருந்துவிட்டால் போதாது. அவற்றைப்பயன்படுத்தும் பழக்கம் மக்கள் மத்தியில் பரவலாக்கப்படவேண்டும்'' என இலக்கிய கருத்தரங்கின்போது சனசமூக நிலையத்சமாச தலைவர் திரு. சி. இராசரத்தினம் கூறினர்.

பண்டிதர்கள் ஐ. பொன்னையா, பொன்னுத்துரை, ஜெகநாதன், திரு. ஐ. நாகநாதன் ஆகியோரும் கருத்தரங்கில் கலந்து உரையாற்றினர்.

.........

## இடமாற்றங்கள்

இமையாணன், ஞாயிறு உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய பண்டிதர் க. முருகேசு நேற்றுத் தொடக்கம் உடுப்பிட்டி மகளீர் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

வதிரி றோமன் கத்தோலிக்க பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய நைல்ஸ் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்

0 0 0

சங்கானை, ஞாயிறு மாத்தளை பாக்கிய வித்தியாலயத்திலிருந்து திரு. க. நாகப்படு திருமதி ம. நாகப்படு ஆகியோரும் உட்புவ தமிழ் மகாவித்தியாலயத்திலிருந்து திரு. எம். ஓங்கார சோதியும் கனகராயன்குளம் மகாவித்தியாலத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளனர்.

0 0 0

கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலையில் கடந்த இருபத்திரண்டு ஆண்டுகள் கடமையாற்றிய ஆசிரியர் திரு. இ. செல்வராசா கோண்டாவில் சைவத்தமிழ் வித்தியாசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். பழையமாணவர்களும் பெற்றோரும் அன்னாருக்கு பிரிவுபசார வைபவம் நடாத்தி அவருடைய சேவைநலம் பற்றி உரையாற்றினர்.

0 0 0

முல்லைத்தீவு, ஞாயிறு முல்லைத்தீவுப் பட்டண சபையின் காரியதரிசியாக இருக்கும் திரு. என். ஏ. ஜ. யோசப் இம்மாதம் 15-ம் திகதி முதல் மானிப்பாய் பட்டினசபைக்கும் மானிப்பாய் பட்டினசபைக் காரியதரிசி திரு. வி சதாசிவம் முல்லைத்தீவுக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

அரசியல் என்பது மக்களுடைய சேமநலத்தைப் பற்றிய விவகாரம். தெய்வத்தையும் மெய்ப்பொருளையும் நாடும் மனிதர்களே அந்தப் பணியில் ஈடுபட வேண்டும். தெய்வபக்தி இல்லாதவர்கள் அரசியல் முயற்சிகளில் சேராமலிருப்பதே நலம்.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49 Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம் 5-ந் திகதி (16-2-70)


## யாழ்ப்பாண புதிய மேயர்

யாழ்ப்பாண மாநகர சபையின் புதிய மேயராக திரு. ரி. எஸ். துரைராஜா நேற்று ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இது வரவேற்கத்தக்கதும பாராட்டத்தக்கதுமாகும். அடுத்த மேயர் யார்? என்று பல பல வதந்திகள் அடிபட்டதுடன், போட்டிகளும் தீவிரமாக இருக்குமென்று கூறப்பட்டது. ஆனால் கடைசியாக போட்டிகள் எதுவுமின்றி புதியமேயர் தெரிவு செய்யப்பெற்றது நல்லதோர் சுப சூசகமாக இருக்கவேண்டும். இனியும் இப்பதவிக்கான தெரிவு போட்டியின்றி ஏகமனதாக இருப்பது பலவிதத்திலும் நல்லது.

மேயர்பதவிக்கு திரு. துரைராஜா புதியவரல்லர். அப்பதவியிலிருந்து பலவருடகாலம் நல்ல அனுபவம் பெற்றவர். அவர் ஒருமனதாகத் தெரிவு செய்யப்பெற்றதும், எல்லாருடைய ஒத்துழைப்பையும் கேட்டிருக்கிறார். ஈழத்தின் இரண்டாவது பெரிய நகரமான யாழ்ப்பாணத்தின் முன்னேற்றம் மாநகரசபையிலும் சிறப்பாகமேயரிலும் அதிகம் தங்கியுள்ளது. புதியமேயரின் ஆட்சியில், நகரபிதாக்கள்கட்சி கோஷ்டிமுதலிய வேற்றுமைகளை மறந்து நகர மக்களின்மேலான நன்மைக்காகவும், முன்னேற்றத்துக்காகவும் ஏகமனதாக ஒத்துழைப்பதாயின், யாழ்ப்பாண நகரசபை மற்ற ஸ்தலஸ்தாபனங்களுக்கெல்லாம் முன்மாதிரியாக இருந்து, யாழ்ப்பாண பொதுமக்களின் நன்றியையும் நல்வாழ்த்துக்களையும் பெறுவதாக இருக்கும்.

## விசாரணை வேண்டும்

வல்வெட்டித் துறையில் நடந்த சம்பவம் பற்றி பாரபட்சமற்ற விசாரணை நடத்துவதைத் தாம் வரவேற்பதாக இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் அட்டிகலே பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்ததாக ஒரு செய்தி கூறுகின்றது. இது வரவேற்கத்தக்கதுடன், இதன் மீது நடவடிக்கை எடுத்து உடன் ஒரு நீதியரசர் தலைமையில் பொதுஜன நம்பிக்கைக்கான ஒரு விசாரணைக் கமிஷனை நியமிக்கவேண்டியது பிரதம மந்திரியின் அவசர கடமையாகும்.

பொதுமக்கள்தான் வல்வெட்டித்துறை சம்பவத்துக்குக் காரணமென்று இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். இது எதிர்பார்க்கக்கூடியதுதான். தமது ஆட்களை ஆதரிக்க வேண்டிய கடமை அவருக்குண்டென்பதை மறப்பதற்கில்லை. இராணுவ சிப்பாய்களில் பெரும்பாலோருக்கும் அப் ...

... மாகாணத்தில் நடந்து வருகின்றன. இராணுவத்தை அகற்ற வேண்டுமென்று தமிழ்த் தலைவர்கள் எல்லோரும் ஏகமனதாகக் கேட்டாலும், அவ்விதம் செய்ய இன்றைய நிலையில் பிரதமர் துணிவாரா என்பது சந்தேகம். சிங்கள மகாஜன கட்சித் தலைவரான திரு. ஆர். ஜி. சேனநாயக, வடமாகாணத்திலிருந்து இராணுவத்தை வாபஸ் வாங்குவதற்கு பதில், அதன் பலத்தை அதிகரிக்கவேண்டுமென்று கவர்னர்ஜெனரல், பிரதமர் உள்ளிட்டு பலருக்கும் தந்தி அடித்துள்ளார். கள்ளக்கடத்தல்காரர்களே இக் கிளர்ச்சிக்குக் காரணமென்றும் அவர் கூறுகின்றார்.

கள்ளக்கடத்தலை தடுக்கவேண்டியதுதான். அதற்காக ஒரு பாவமுமறியாத பொதுமக்களையும் அவர்களது எம். பியையும் தாக்கி அப்பகுதி மக்கள் நிம்மதியாக வாழமுடியாமல் செய்வது ...

# யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம்

# தமிழ், சிங்களம், ஆங்கிலம் போதனைமொழியாக வேண்டும்

## யாழ். மாநகரசபை உறுப்பினர்

யாழ்ப்பாணம். திங்கள் இங்கையிலுள்ள எந்தஇனத்தைச் சேர்ந்த மாணவர்களாயினும் கல்விப் போதனை பெறக் கூடிய விதத்தில் முழுமையான பூரணத்துவம் வாய்ந்த பல்கலைக் கழகமும் மொழிகளும் போதனைமொழியாகக் கொண்டுயாழ்பாணத்தில் நிறுவப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ். மாநகர சபை அங்கத்தவர் திருமதி ஏ. சுவாமிநாதன் ஜே, பி. பல்கலைக்கழக விசாரணைக் கமிஷன் முன்னிலையில் நேற்றுச் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார். மா நகர சபை உறுப்பினர்களான திரு. ரி. எஸ். துரைராசா திரு. ஈ. கே. இராசரத்தினம் ஆகியோரும் தூதுக் குழுவில் சென்றிருந்தனர்.

திருமதி சுவாமிநாதன் மேலும் கூறியதாவது:- வடபகுதியிலிருந்து பல்கலைக்கழகம் செல்லும் மாணவர் தொகையைக் கணித்தும் தற்போதுள்ள பல்கலைக் கழகங்களில் நிலவும் மாணவர் இடநெருக்கடி, வசதியீனங்களைப் போக்கவும் யாழ்ப்பாணத்தில் புதிய பல்கலைக் கழகம் நிறுவப்படுதல் அவசியம் இத்தகைய பல்கலைக் கழகமொன்றிற்கு அரசாங்கத்தால் ஏற்கனவே சுவீகரிக்கப்பட்டுள்ள கட்டிடங்களும் காணி நிலங்களும் போதியளவு இங்கு இருக்கின்றது. போக்குவரதது வசதிகள் நிறைந்த இடமாவும் சட்டத்துறை பொது நூல் நியங்களின் வசதி வாய்ப்புகள் அமைந்ததாகவும் யாழ்ப்பாணம் விளங்குகின்றது, காலசுவாத்தியமும் சூழலும் கூட யாழ் நகரில் உயர்தர கல்விப்போதக்கு ஏற்றதாக இருக்கின்றது.

### யாழ்ப்பாண பல்கலைக் கழகம் என்றபெயர்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் என்றபெயரில் ஸ்தாபிக்கப் படுவதுடன் சகல துறைபீடங்களையும் அமைந்ததாகவும் புதிய பல்கலைக் கழகம் இருத்தல் வேண்டும் இங்குள் சில உயர்தர பாடசாலைகளையும் பலகலைக் கழகத்துடன் இணைத்துஉயர் கல்விக்கு மாணவர்களை தயார்ப்படுத்தலாம்.

### ஆராய்ச்சித்துறை வேண்டும்

இப்போதைய பல்கலைக் கழகங்களில் ஆராய்ச்சித் துறைஇடம் பெற்றதாக இல்லை. சிலதுறைகளிலேயினும் ஒவ்வொரு பல்கலைக் கழகங்களும் ஆராய்ச்சி நடாத்த வேண்டும். இத்தகைய பிரிவு புதிய பல்கலைக் கழகலைக்கழகத்தில் சேர்க்கப்படல் வேண்டும். கல்வித் துறையில் அபிவிருத்தியடைந்துள்ள பகுதியிலேயே பல்கலைககழகங்கள் அமைகக்கப்படவேண்டும். இதற்கானவசதி வாய்ப்பெல்லாம் யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தியுடன் நிறைந்திருககின்றன. (மல்லா. நிரு)

— —

### கடற்றொழிலாளர் கவலை

அல்லைப்பிட்டி, ஞாயிறு வேலணை தெற்குதுறைமுக கடலிலும் வேலணை செட்டிபுலம் கடலிலும் டைனமைற் வெடிவைத்து மீன் பிடிப்பவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இதனால் இவ்விரு கடலிலும் மீன்பிடிக்கும் கடற்தொழிலாளர்கள் மிகுந்த பீதி அடைந்துள்ளார்கள்.

— —

### நூற்றாண்டு விழா

மட்டக்களப்பு, ஞாயிறு மட்டுநகரில் லெனின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட இருக்கின்றது, இவ்விழாவையொட்டி பொருட்காட்சியும் படக்காட்சியும் இம்மாதம் 21-ம் திகதி தொடக்கம் 23-ம் திகதிவரை பொது நூல்நிலையத்தில் நடைபெறவுள்ளன. இவ்விழாவில் சோவியத் ஸ்தானிக கலாச்சாரப்பகுதி அதிபர் டாக்டர் ஜே. எம். வினிக் கலந்து கொள்வார்.

இக் கொண்டாட்டம் லங்கா சோவியத் நட்புறவுச் சங்கத்தின் மட்டுநகர் கிளையின் ஆதரவில் நடைபெறுகிறது.

### அரிசி விலை குறைகிறது

ஊர்காவற்றுறை, ஞாயிறு யாழ்ப்பாணப்பகுதியில் கடந்த சில தினங்களாக உள்ளூர் அரிசியின் விலை குறைந்து கொண்டுவருகிறது.

ஒருபடி ரூபா 1-75 சதமாக விற்கப்பட்ட அரிசி தற்போது ரூபா 1-60 சதமாக விற்கப்படுகிறது.

நெல்காலபோக விளைச்சல் இம்முறை நன்றாக இருப்பதால் அரிசிவிலை மேலும் குறைக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

— —

### பயிர்செய்கைக் குழுக்கூட்டம்

ஊர்காவற்றுறை. ஞாயிறு தீவுப்பகுதி பயிர்ச்செய்கைக்குழு சமாசக்கூட்டம் கமத்தொழில்சேவை உதவி ஆணையாளர் திரு எஸ். சிவசிதம்பரம் தலைமையில் சமீபத்தில் நடைபெற்றது.

சமாசம் எடுத்துக்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து இக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

வெள்ளப்பெருக்கு பயிர் அழிவு நிவாரணம் தென்னிலங்கை விவசாயிகளின் சிநேகபூர்வமான உறவை வளர்த்து நாட்டின் சுய தேவையைப் பூர்த்திசெய்ய ஒன்றுபட்டு உழைத்தல் போன்ற விடயங்கள் இக் கூட்டத்தில் ஆராயப்பட்டன.

பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்,

தலைவர் திரு ஏ. கனகசபை காரியதரிசி திரு கு. பத்மநாதன் தனதிகாரி திரு ஏ. துரைராசா.

— —

### கோரிக்கை

மல்லாகம், ஞாயிறு காங்கேசன்துறை எம் பி திரு எஸ் ஜே வி செல்வநாயகத்தை வயாவிழான் மத்திய மகாவித்தியாலய பெற் ...

# 'பயிற்சிக்கு தகுந்த பல தொழிற்சாலை வடக்கில் உண்டு

## மாணவர் சம்மேளனம் கூறுகிறது

யாழ்ப்பாணம், திங்கள் ''பல்கலைக்கழகம் செல்லும் தமிழ் மாணவர்களில் வடபகுதியில் இருந்தே பெரும்பான்மையினர் செல்லுகின்றனர். பல்கலைக்கழகம்வடக்கிலோ, கிழக்கிலோ அமைந்தாலும் அங்கு செல் லேயே அதிக மாணவர்கள் உள்ளனர். பல்கலைச்கழகத்துக்குச் செல்லும் தமிழ் மாணவர்களில் பெரும்பான்மையினர் வடபகுதியிலிருந்தே செல்கிறார்கள். பல்கலைக்கழகம் வடக்கில் அமைந்தாலென்ன கிழக்கி ...

... வசதிகள் போன்று யாழ்ப்பாணத்தில் கிடைக்கும். கிழக்கிலும் பார்க்க வடகிலேயே பல்கலைக்கழகஆசிரியர்களுக்கான தகுதியுடையவர்கள் பகுதியிலேயே செயலாற்றுவதற்கு விரும்புவார்கள் மேலும் கிழக்கிலும் ...

# ஐயாறன் எழுதுவது..

தவத்திரு குன்றக்குடி அடிகளாரை சிறப்பாசிரியராகக் கொண்ட ''தமிழகம்'' சஞ்சிகை நேற்றுக் கிடைத்தது. அவர் தமிழக மேல் சபை உறுப்பினர் மட்டுமல்லாமல், தெய்வீகப் பேரவையின் தலைவருமாவார். ஆகவேதமிழகத்திலே நடைபெறும் சமய சம்பந்தமான தகவல்களைத்தெரிந்துகொள்ள இச்சஞ்சிகை மிகவும் பயன்படுகிறது, இம்மாதம் வந்த சஞ்சிகையிலே 'கேளுங்கள் சொல்லுகிறோம்' என்ற பகுதியில் குறிப்பிட்டுள்ளதாவது:

வினா: ஒவ்வொரு கோவிலிலும் அதனதனுக்கென்று ஏற்பட்ட ஆகமத்தின் வழி பூசைகள் நடைபெறவேண்டுமென்று ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள் அறிவித்திருக்கிறார்களே. அது பற்றித்தங்கள் கருத்தென்ன?

விடை: ஆம் அது சரியான கொள்கையே. நமக்கும் அதே கொள்கைதான் ஒவ்வொரு கோயிலிலும் அந்த ஆகமத்தின் வழிதான் பூசைகள் நடைபெறும். இதில் இம்மியும் நமக்கு மாறுதல் இல்லை. ஆகமவழி பூசைகள் செய்யப்பெற்று எம்பெருமானை எழுந்தருளச்செய்த பிறகு, பக்தர்கள் போய் பூப்போட்டு வழிபாடு செய்துகொள்ளலாம் என்பதற்கும், கோயிலில் ஆகமத்தின்படி பூசை நடைபெற வேண்டுமென்பதற்கும் எந்த விதமான மோதுதலும் இல்லை.

வினா: ''ஒவ்வொரு திருக்கோயிலிலும் அதற்கென்று ஏற்பட்டிருக்கும்ஆகமத்தின் வழி பூசைகள் நடைபெற வேண்டும்'' என்று ஜகத்குரு சங்கராச்சாரி சுவாமிகள் அறிவித்திருக்கிறார். ஆகமம் என்பது பூசை செய்யும் முறைகளைப் பற்றிக் கூறுவது. அந்த முறைப்படிதான் பூசை செய்ய வேண்டும் என்பது சரியென்றே எனக்குப்படுகிறது. ஆனால் அந்தப்பூசையை அந்தஆகம முறைதவறாத தகுதியுடைய வேறு எவரும் செய்யலாமா? அல்லது ஒரு குறிப்பிட்ட ஒரு சாதிதான் செய்யவேண்டுமா?

விடை: அன்பு கூர்ந்து காமகோடி ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சாரி சுவாமிகள் அவர்களுக்கே எழுதிக் கேளுங்கள். ''தெளிவு பிறக் ... கொண்டு விசாரிக்கச் செய்து, அடித்த ஆசிரியை வேலையிலிருந்து நீக்கி, கல்வி இலாகாவின் அங்கீகாரத்துக்கு இதை அனுப்பிவைத்தனராம். ஆனால் கல்வி இலாகா நிரந்தரக்காரியதரிசி, இதை ஒப்பாமல், ஒரு குறைந்த தண்டனையைக் கொடுத்து அவரை மீண்டும் வேலைக்கு வைத்துக் கொள்ளுமாறு எழுதியதாகத்தெரிகிறது

பின்னர் தாம் நேரில், நிரந்தரக்காரியதரிசியைக் கண்டு நிலைமையைவிளக்கி கடிதமும் எழுதியுள்ளதாகவும், இதற்கு பதில் எதிர்பார்ப்பதாயும், இது விசாரணையில் இருப்பதால் வித்தியாலயத்தை அரசாங்கம் கையேற்கும் விஷயமே எழவில்லை என்றும் முகாமையாளர் எழுதியுள்ள மறுப்பில் தெரிவிக்கின்றார்.

சென்ற சுமார் 9 வருடங்களாக கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயத்தை அதன் நிர்வாகிகள், அரசாங்க உதவி பெறாமல் பெரும் தியாகத்துடன் நடத்திவருவது பகிரங்க ரகசியம். நாட்டிலேயே, தனிப்பட்ட முறையில் இவ்விதம் நடைபெறும் ஒரே ஒரு சைவக் கல்லூரி இது ஒன்றே ஒன்றுதான். மேற்குறித்த தகராறை சுமுகமான முறையில் தீர்க்க நிச்சயம் வழி இருக்கவேண்டும். அதைச்சாட்டுக்கூறி, இக் கல்லூரியையே அரசாங்கம் கைப்பற்றுவது எவ்விதத்திலும் சரியாகாது. இந்த விவகாரம் நல்லபடி தீர்ந்து, சைவ சமூகத்தின் விசேஷ ஆதரவுடன் இக்கல்லூரி நீடித்து சுதந்திரமாக நடைபெறுமென்று நம்புவோம்.

0 0 0

வெம்மையான வினைக் கடல் நீங்கிநீர், செம்மையாய சிவகதி சேரலாம். சும்மையார் மலர்த்தூவி தொழுமினோ, நம்மையாளுடையானிடம் நல்லமே.

— அப்பர் அடிகள்.

—

### ஆமணக்கு விதைசாப்பிட்ட மாணவர் நிலை

அனலைதீவு, ஞாயிறு விஞ்ஞான பரிசோதனைக்காக கல்லூரி ஆய்வுகூடத் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதறலில்லை. இராணுவ சிப்பாய்களில் பெரும்பாலோருக்கும் அப்பகுதிப் பொது மக்கள் பேசும் மொழியாகிய தமிழ் தெரியாது. யாரையும் கைதுசெய்யவேண்டியிருப்பின், அதைப் பொலிசார் மூலம் ஏன் செய்யக்கூடாது? பொலிசாரால் அது முடியாவிட்டால், அவர்களுக்கு உதவியாக இராணுவத்தினர் நடவடிக்கை எடுக்கலாம். ஆனல் மக்களின் பிரதிநிதியாகிய எம். பி. ஒருவர் தம்மை அறிமுகம்செய்து கொண்ட பின்பும், அவரைக் காலால் உதைத்துத் தாக்கினரெனின் சாதாரண பொதுமக்களை இராணுவத்தினர் எப்படி நடத்துவாரென்பதை ஊகிப்பது கடினமல்ல.

அடையாள அணிவகுப்பில் தவருனவர்கள் காட்டப்பட்டதால் சிப்பாய்கள் யார்மீதும் வழக்குத் தொடரப்படமாட்டாதாம் இது ஏமாற்றமளிப்பதாகும். இத்துடன் இதைவிட்டுவிட முடியாது.

இதைப்போன்ற பலபல சம்பவங்கள் வட எம். பியையும் தாக்கி அப்பகுதி மக்கள் நிம்மதியாக வாழமுடியாமல் செய்வது சரியாகுமா? மன்னர் உள்ளிட்டு இராணுவக்காவல் உள்ள பல இடங்களிலும் பொதுமக்கள் தாக்கப்படுவதாக பல புகார்கள் கிடைக்கின்றமையால், கள்ளக் கடத்தலைத் தடுக்க இராணுவம் அவசியம்தானு? கொழும்பு உள்ளிட்டு மற்றப் பகுதிகளிலும் கள்ளக்கடத்தல்கள் நடக்கையில் அங்கு இராணுவத்தைப் பயன்படுத்தாமல், வடமாகாணத்தில் மட்டும் இவ்விதம் செய்வானேன்? மற்ற நாடுகளில் சுங்க அதிகாரிகளும், பொலிசாரும் இந்தத் தடுப்பு வேலையைச்செய்வது போல், இங்கும் ஏன் அவ்விதம் செய்ய முடியாது? இராணுவம் இருக்கத்தான் வேண்டுமாயின் பொதுமக்கள் தாக்கப்படாமலும், அவர்கள் பயமின்றி வாழவும் என்ன பாதுகாப்புகளைச் செய்ய வேண்டும்? இவைபற்றி ஒரு விரிவான விசாரணை நடத்தி, அவர்கள் கூறும் யோசனைப்படி அரசாங்கம் நடவடிக்கை எடுக்க கடமைப்பட்டுள்ளது.

பெரும்பான்மையினர் செல்லுகின்றனர். பல்கலைக்கழகம்வடக்கிலோ, கிழக்கிலோ அமைந்தாலும் அங்கு செல்லும் தமிழ் மாணவர்கள் தொகையில் அதிகமானேர் வடபகுதியினராகவே இருப்பர். ஆதலால் பல்கலைக்கழகம் வடபகுதியிலேயே அமைதல் வேண்டும்''

யாழ்ப்பாணமாணவர் சம்மேளன சார்பில் திருக்குடும்ப கன்னியர் பாடசாலை ஆசிரியை திருமதி என். சவரிமுத்து பல்கலைக்கழக கமிஷன் முன்னிலையில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

மேலும் திருமதி சவரிமுத்து கூறியதாவது:-

பல்கலைக்கழகம் அமையும் நிலையம் மாணவர்களின் தொகையைப் பொறுத்திருக்கவேண்டும் தமிழர் குடிகுடியிருப்பின் சரித்திரப் பிரசித்திபெற்ற யாழ்ப்பாணத்திலேயே தமிழர் ஜனத்தொகை அதிகரித்துள்ளது. எனவே உத்தேச பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படுவதே நியாயமானதாகும்.

பல்கலைக்கழக புகுமுக வகுப்புகளில் கிழக்கிலும் பார்க்க யாழ்ப்பாணத்திமையினர் வடபகுதியிலிருந்தே செல்கிறர்கள். பல்கலைக்கழகம் வடக்கில் அமைந்தாலென்ன கிழக்கிலமைந்தாலென்ன அங்கு செல்லும் தமிழ் மாணவர்கள் தொகையில் அதிகமானேர் வடபகுதியினராகவே இருப்பர் ஆதலால் இப்பெருந்தொகை மாணவருக்கு அவர்கள் இடத்திலேயே ஒருபலகலைக்கழகம் அமைக்கப்படவேண்டும்.

அடுத்து போக்குவரத்து வசதியும்கிழக்கிலும் பார்க்க வடக்கிலேயே சிறப்பாக அமைந்துள்ளது. மலும் நீண்டகால வரட்சியாலும் அடிக்கடி ஏற்படும் வெள்ளப் பெருக்காலும் பாதிக்கப்படும் கிழக்குமாகாணத்திலும் பார்க்க வடபகுதி காலநிலமையும் பல்கலைக்கழகம் நிறுவுவதற்குச்சாதகமாகவுள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியர்களைப் பொறுத்த அளவில் அவர்களும் பாதகமாகவமைந்துள்ள காலநிலைபோக்குவரத்துவசதி முதலியவற்றைக் கருதிகிழக்கில் பல்கலைக்கழகம் அமைவதை விரும்ப மாட்டார்கள் கொழும்பு பேராதனை ஆகிய இடங்களில் கிடைக்கும் வீட்டு வசதியர்களுக்கான தகுதியுடையவர்கள் பகுதியிலேயே செயலாற்றுவதற்கு விரும்புவார்கள் மேலும் கிழக்கிலும் பார்க்க வடக்கிலேயே பல்கலைக்கழக மாணவர்களுக்குப்போதிய இருப்பிட வசதியும் உண்டு.

பல்கலைக் கழக மாணவர்களுக்கு அவர்கள் ஈடுபடும் துறைகளில் செயல்முறைப் பயிற்சியைப் பெறுவதற்கு தக்கவாறு யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி, சீமெந்து தொழிற்சாலை, பரந்தன் ரசாயனத் தொழிற்சாலை, திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சிபண்ணை ஆனையிறவு உப்பளம் முதலியன உதவியாகவிருக்கும் இதைவிட கிழக்கிலும் பார்க்க வடக்கிலேயே நூல்நிலைய வசதிகளும் பல்கலைக் கழகத்துக்கு உகந்ததாக உள்ளன.

ஆகவே இவற்றிலெல்லாம் இருந்து யாழ்ப்பாணத்திலேயே பல்கலைக் கழகம் அமையத்தக்க வசதிகள் உள்ளன. என்பது வெளிப்படையாகிறது. இதனுல்தான்டாம், குணவர்த்தன கமிஷன்களும்யாழ்ப்பாணத்தை 3-வது பல்கலைக்கழக வளவாகச் சிபார்சு செய்துள்ளது. (மல்லா நிரு)

மல்லாகம், ஞாயிறு

காங்கேசன்துறை எம் பி திரு எஸ்ஜே வி செல்வநாயகத்தை வயாவிழான் மத்திய மகாவித்தியாலய பெற்றேர் ஆசிரிய சங்கத்தினர் வழக்கறிஞர் வ இராசநாயகம் தலைமையில் சந்தித்து மேற்படி மகாவித்தியாலயத்தில் ஜீ சீ ஈ உயர்தர வகுப்புக்களை நீக்கம் செய்யாது விஞ்ஞான ஆய்வு கூடத்தை விஸ்தரித்து உயர்தர வகுப்புக்களைத் தொடர்ந்து நடாத்த நடவடிக்கை எடுக்கக் கோரியுளளனர். கோப்பாய் எம் பி. வித்தியாதிபதி ஆகியோருக்கும் மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## அரைக்கம்பத்தில் தேசியக்கொடி

யாழ்ப்பாணம், திங்கள்

காலஞ் சென்ற அஸ்கிரிய பீட மகாநாயக்கத் தேரோவண உடுகம ஸ்ரீ புத்தரகித்த ரத்தினபாலாவின் உடல் நேற்றுத் தகனம் செய்யப்பட்டமை குறித்து மரியாதை செலுத்தும் முகமாக நேற்றைய தினம் யாழ்ப்பாண அரசாங்க செயலக வாசலில் இலங்கைத்தேசியக்கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டது. (மல். நி)

விடை: அன்பு கூர்ந்து காமகோடி ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சாரி சுவாமிகள் அவர்களுக்கே எழுதிக் கேளுங்கள். ''தெளிவு பிறக்கட்டும்'' என்று அடிகளார் எழுதியுள்ளார்.

இந்தப்புதிய இயக்கத்தைப்பற்றி தமிழகத்திலே சில கோவில் குருக்கள்மார்களை விசாரித்தேன். அவர்கள் இதைப்பற்றி அதிக அக்கறை காட்டவில்லை பல குருக்கள்மார்களும், தங்களுடன் இந்தத்தொழில் போதுமென்றும், தங்கள் பிள்ளைகள் படித்துத்தேறி வேறு உத்யோகங்கள் பார்க்கவேண்டுமென்றே தெரிவித்தனர்.

0 0 0

கொழும்பிலுள்ள சைவ மங்கையர் வித்தியாலயத்தை கல்வி இலாகா மேற்கொள்ளப்போவதாக ''டெயிலி நியூஸ்'' பத்திரிகையில் வெளியான ஒரு செய்தி தவறென்று கூறி, அந்த வித்தியாலய முகாமையாளர் திருமதி நமசிவாயம் ஒரு மறுப்பு அனுப்பியுள்ளார்.

அந்த வித்தியாலயத்திலே ஓர் ஆசிரியை மற்ருெரு ஆசிரியையைஅடித்துக் காயப்படுத்தி விட்டாராம். இதைப்பற்றி ஓர் ஓய்வு பெற்ற நீதிபதியைக்

## மாணவர் நிலை

அனலைதீவு, ஞாயிறு

விஞ்ஞான பரிசோதனைக்காக கல்லூரி ஆய்வுகூடத்துக்குக் கொண்டுவரப்பட்ட ஆமணக்கம் விதைகளைச்சாப்பிட்ட நான்கு மாணவர்கள் வாந்தி எடுக்கும் நிலையில் அனலைதீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். இச்சம்பவம் அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

8-ம் வகுப்பைச் சேர்ந்த குறிப்பிட்ட மாணவர்கள் விஞ்ஞான ஆய்வுகூடத்தில் இருந்த ஆமணக்கம் விதைகளை எடுத்துச்சாப்பிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மயக்கமுற்றநிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட நால்வரில் மூவரின் நிலைதிருப்தி அடைந்துள்ளதாம்.

## சுற்றுலா செய்தி

கொழும்பு, ஞாயிறு

பம்பலப்பிட்டியிலுள்ள ஒரு பாடசாலையின் சில ஆசிரியைகளும் மாணவிகளும் யாழ்ப்பாணத்துக்கு சுற்றுலா சென்றுதிரும்பியது சம்பந்தமாக 'ஈழநாடு' ஏட்டில் வெளியான செய்தியைத் தொடர்ந்து இத்தகவலை வெளியிட்டவர் யார் என்பதைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிநடைபெறுகின்றதாம்.

சுற்றுலா சென்றிருந்தவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் இரவு நேரத்தில் ஏற்பட்ட அனுபவம் சம்பந்தமான செய்தி சில தினங்களுக்கு முன் வெளியாகியிருந்தது. இது சம்பந்தமாக மேற்படி பாடசாலையின் மாணவிகள் பலர் விசாரிக்கப்பட்டிருப்பதாகத்தெரிகின்றது. (சி. பி. ஏ)

## மேயரை பிரேரிக்க ... ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ததாகவும் தெரிவித்தார். உடனே திரு. கே. எஸ். நடராசா எழுந்து ஜனப்பசீர் அனுவதித்ததாக கூறினர். இதை மறுத்த திரு. நாகராஜா, அவர் பிரேரிப்பதற்குமுன் அனுவதிக்க முயறசித்ததாகவும், தான் தான் சரியான முறையில் அனுவதித்ததாகவும் கூறினர். வேறு பெயர் எதவும் பிரேரிக்கப்படாததால் திரு. துரைராஜாவே புதிய மேயரென கமிஷனர் அறிவித்

திரு துரைராஜாவை திரு நாகராஜா மண்டபத்திற்கு வெளியில் அழைத்து வந்தபோது ஜனப் எம் சி பசீர் மாலை சூட்டினர். இதைத் தொடர்ந்து மற்றும் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் மாலைசூட்டினர்கள். மாநகரசபை உறுப்பினர்களுக்கு தேநீர் விருந்து அளிக்கப்பட்டது

திரு துரைராஜா பேசும்போது கூறியதாவது:-

எந்த விஷயமானுலும் எவரும் என்னுடன் நேரில்வந்து பேசினுல் நடவடிக்கை எடுப்பேன் என்று உறுதியாகக் கூறுகிறேன். உங்கள் நகரம் என்று கருதி எனக்குப்பூரண ஒத்துழைப்புத் தரும்படி உறுப்பினர்களையும் ஊழியர்களையும் மக்களையும் கேட்டுக்கொள்கிறேன்


கடைசி 4 தினங்கள்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

ஔவையார்

20-ந் திகதி முதல்

எம். ஜி. ஆர். — ஜெயலலிதா நடித்த

காதல் வாகனம்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 16-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

# "பல்கலைக்கழகம் நிறுவ யாழ். நகரில்போதியஇடமில்லை"

## திருமலையில் நிறுவும்படி வழக்கறிஞர் குழு சாட்சியம்

யாழ்ப்பாணம், திங்கள்

'உத்தேச பல்கலைக்கழகம் திருமலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா ஆகிய பகுதிகளில் நான்கு துறைப் பீடங்களாக பரவலாக்கி, நிறுவப்பட வேண்டும். அன்றேல் முழுமையானதாக திருமலையில் இருத்தல் அவசியம்.' இவ்வாறு வழக்கறிஞர் எஸ் சி மகாதேவா தலைமையில் பல்கலைக்கழக கமிஷன் முன்னிலையில் யாழ் வழக்கறிஞர் சங்கத்தின் சார்பில் சாட்சியமளித்த பிரதிநிதிகள் குழுவினர் தெரிவித்தனர்.

முன்னர் 45 பேர் கையெழுத்திட்டு அனுப்பியிருந்த மகஜரையடுத்து அட்வகேற் ஆலாலசுந்தரம், புறகடர்களான யோகேஸ்வரன், அரிராஜா ஆகியோர் இக்குழுவில் அடங்கியிருந்தனர்.

இக் குழுவினர் மேலும் கூறியதாவது: பொறிஇயல், விஞ்ஞானத்துறை, பல்கலைக்கழக தலைமைப் பீடம் போன்றன திருமலையில் இருத்தல் வேண்டும். யாழ் நகரில் வைத்திய, நுண்கலை, சைவசித்தாந்தப் பகுதிகள் அமையவேண்டும் வவுனியாவில் விவசாய பீடமும், மட்டக்களப்பில் கலை, இஸ்லாமிய பகுதிகளும் நிறுவுதல் அவசியம். தமிழ்ப் பகுதிகளுககுப் பொதுவானதாக திருமலை கிழககே திருக்கோவிலிலிருந்து, பருத்தித்துறை வரை அமைந்திருககிறது. யாழ் நகரில் முழுப் பல்கலைக்கழகம் வைப்பதால் யாழ்ப்பாணம் தவிர்ந்த மன்னர் திருமலை, மட்டக்களப்புமலைநாடு, கொழும்பு போன்ற பகுதிகளில் இருப்பவர்களுககு வசதி கஷ்டமாக இருக்கும். பூரணத்துவமாக நிறுவ யாழ் நகரில் போதிய இடவசதி இல்லை. நிலப்பரப்பும் உப்புச் சவர் நிறைந்தது. இப் பகுதியில் பல்கலைககழம் அமைப்பது கஷ்டம். தண்ணீர் தட்டுப்பாடும் இங்கு உண்டு. நீர்த்தட்டுப்பாட்டுககு யாழ் மாநகரசபை நீர்விநியோகத் திட்டம் ஆரம்பித்தும் கோண்டாவில், திருநெல்வேலி ஆகிய இடங்களில் கிணறுகள் பாரதூரமாக வற்றி தட்டுப்பாடு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் குடிசன நெருக்கம் நிறையவுள்ளது. திருமலையில் இவ்வாறன சன நெருக்கம் இல்லை. மகாவலிகங்கை நீர் கிழககில் பெருமளவு பாய்கின்றது கிழககு கல்வித்துறையில் பின்தங்கியும், புறககணிககப்பட்டும் இருககின்றது. இதனுல் திருமலையில் தான் நிறுவி குறைகளையும் தீர்த்துக கொள்ளலாம். (மல், நி)

## 'யாழ்ப்பாணத்தில் நவீன பல்கலைக்கழகம் வேண்டும்'

### யாழ். தமிழாசிரியா சங்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

''கல்வியாராய்ச்சி நிபுணர்கள் கூறிய கருத்துக்களைப் பின்பற்றி யாழ். நகரில் ஒரு நவீன சர்வகலாசாலை நிறுவுதல் அவசியம் என உயர்தர மாணவர்களும், ஆசிரியர்களும், பெற்றேரும் அபிப்பிராயப்படுகின்றனர். இச்சர்வகலாசாலை பேராதனை, கொழும்பு சர்வகலாசாலைகளுக்கு சமமாகவும் தமிழ் சமஸ்கிருத மொழிகளில் பாண்டித்தியம் பெறக்கூடியதாகவும் இருக்கவேண்டும். சமய, கலாச்சாரங்களை நவீன ஆராய்ச்சி முறையில் கற்பிப்பதுடன் விஞ்ஞானம், தொழில்நுட்பம், மருத்துவம், விவசாயம் போன்ற கலைகளும் போதனை செய்யப்படுதல் அவசியம்.''

தேசிய உயர்கல்விச் சபைக் குழுவின் பல்கலைக்கழக விசாரணைக் கமிஷன் முன்னிலையில் யாழ்ப்பாணத் தமிழாசிரியர் சங்கத்தினர் சமர்ப்பித்த சாட்சியத்தின் போது மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

மேற்படி சங்கப் பிரதிநிதிகள் கோஷ்டியில் திருவாளர்கள் இ. பொ. குமாரசாமி, நீ எஸ்தாக்கி, ஆ. மாட்டீன், த. இராசேந்திரம், க. கதிரவேல் ஆகியோர் சென்றிருந்தனர்.

எங்கள் நாட்டில் சாதி, சமய, மொழி வேற்றுமைகள் தலைதூக்காது ஒற்றுமை ஏற்பட்டு கல்வி கலாச்சார ஆராய்ச்சி தழைத்தோங்க கல்வி அடிப்படைகளின் ஆதரவில் யாழ். நகரில் முழுமையான பல்கலைக்கழகம அமைக்கப்படவேண்டும். இப்புதிய பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் பயிற்சி, பட்டதாரி ஆசிரியர்பயிற்சி, இந்து சமயக்கல்வி போன்றவற்றுக்கு இடமளித்தல் வேண்டும். சுவாமி விபுலானந்த அடிகளும், நீடாம் கமிஷன், குணவர்த்தன கமிஷன் என்பதையும் தமிழ்ப் பகுதியான யாழ்ப்பாணத்திலயே மற்றைய புதிய பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டும் என வற்புறுத்தியிருந்தனர். (மல்லா. நி.)

## தெலிங்கானு கிளர்ச்சி

### 43 லட்சம் நஷ்டம்

பெங்களூர், பெப் 15

தெலிங்கானு போராட்டங்களின் காரணமாக 43 லட்சம் ரூபாய் ஆந்திர அரசுக்கு நஷ்டம்ஏற்பட்டிருக்கின்றது.

போக்குவரத்துக்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் மாத்திரம் 28 லட்சம் ரூபாய் என்று கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

ரயில்வே மற்றும் தபால் நிலையங்களுக்கு ஏற்பட்ட நஷ்டங்கள் 12லட்சம் ரூபாய் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org